உ

திருச்சிற்றம்பலம்.

பட்டுக்கோட்டை, முருகமாவேளகம்

ஸ்ரீமான்: வீ. வேங்கடராயபிள்ளையவர்களது

சரித்திரமும்,

அவர் இயற்றிய

பிரசங்கங்களும், செய்யுட்களும்.

க. சரித்திரம்.

௨. நட்பும், அதன் ஆராய்ச்சியும்.

௩. மானுடம்பெற்றார் ஒழுகலாறு.

௪. பெரியாரைத் துணைக்கோடல்.

௫. தென்னூர்த்தமிழபிவர்த்தனி சபை வாழ்த்து.

இவை

தஞ்சாவூர் ஸெயின்ட் பீடர்ஸ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

பிரம்மஸ்ரீ: வையை, R. சுப்பிரமணியையரவர்கள்

எழுதிய முகவுரையுடன்

[விலை] [அணா ௨.

தஞ்சை:
கல்யாணசுந்தரம் முத்திராசாலையில்
பதிப்பிக்கப்பட்டன.

சௌமிய ஞு ஆனிமீ ௨௯.

முகவுரை.

பட்டுக்கோட்டை மகா-ா-ா-ஸ்ரீ வேங்கடராமபிள்ளையவர்கள் காலஞ்சென்றதும் அவர் நண்பரிற்சிலர், பிள்ளையவர்களது பிரிவாற்றாது வருந்தி, ஒருவாறு ஆறுதலடையவேண்டி, அப்பிள்ளையவர்களது சரித்திரத்தையும், அவர் எழுதிவைத்திருந்தவற்றுள் தம் கைக்குக் கிடைத்தனவாகிய மூன்று பிரசங்கங்களையும், இன்னும் சில செய்யுட்களையும் அச்சிடுவான் புகுந்தனர். இது நல்ல வழியே; அருமையான நண்பரைப் பிரிந்தவர்களுக்கு, அந்நண்பரது குணாதிசயங்களை எண்ணியும், சொல்லியும், எழுதியும், ஒருவாறு ஆறுதலடைவதைத்தவிர வேறு என்னவழியிருக்கிறது? அன்றியும் இவ்வாறு ஒரு புத்தகம் அச்சிட்டு வெளிப்படுத்துவது அவர்களுக்கு ஒரு கடமையாகவும் இருக்கிறது. எவ்வாறெனில், தமது நண்பர் நோக்கங்களை முற்றுப்பெறச்செய்வது எவர்க்குங் கடமையன்றோ? நோக்கமென்னையெனின்—ஸ்ரீ வேங்கடராமபிள்ளையவர்கள் யாவரும் கேட்டு இன்புறவேண்டுமென்ற நோக்கத்தோடு எழுதிவைத்த அப்பிரசங்கங்களுட் சில, சில இடையூறுகளால் பிரசங்கிக்கப்படாமல் எழுத்தளவாய் நின்றுவிட்டனவாதலின் அவற்றைப் பிரசுரஞ்செய்து யாவரும் அறியச் செய்வது அப்பிள்ளையவர்களது நண்பர்க்கு ஓர் கடமையேயாம். அன்றியும், அப்பிள்ளையவர்களது பெரிய நோக்கம் 'யாவரும் நன்மைபெற வேண்டி ஒவ்வொருவரும் பிரசங்கமூலமாகவும், இன்னும் அவரவர்க்கியன்ற பலவாறாகவும் உழைக்கவேண்டு'மென்பது. சுயநயம்பாராட்டாமல் 'யாவரும் நன்மைபெறப் பாடுபடவேண்டும்' என்னும் இந்த அருமையான விதை அவர் மனதிற்கிடந்து வளர்ச்சிபெற்று வந்ததென்பதை, மேல், அவர் சரிதத்தையும், பிரசங்கங்களையும் வாசிப்போர் நன்கு அறியலாம். ஆகவே, இவ்வாறு நல்லபுத்தகங்களை வெளியிடுவது பிறர்க்கு உபகாரமான உழைப்புக்களில் ஒன்றாதலின், இந்த நல்ல உழைப்பு, அவ்வேங்கடராம பிள்ளையவர்களது நண்பர்களுக்கு, அப்பிள்ளையவர்களது நோக்கத்தை நிறைவேற்றினதாக முடிதலின், இவ்விருவகையானும், தம் நண்பர் நோக்கங்களை நிறைவேற்றும் கடமையாகவே முடிந்தது இப்புத்தகத்தை அச்சிடுவது.

ஷைபிள்ளையவர்களை நான் நேரில் பார்த்தறிந்தவன்; அவர் ஸெயிண்ட் பீட்டர்ஸ் காலேஜில் வாசித்துக்கொண்டிருந்தபொழுது அவர்க்குத் தமிழ்ப் பாடம் சொல்லிக்கொடுத்தும் அறிந்தவன்; அவர் சிலசில சமயங்களில் செய்த பிரசங்கங்களைக்கேட்டும் அறிந்தவன்; இன்னும், அவரோடு நன்கு பழகியும் அறிந்தவன். இவ்வாற்றான், நான் அறிந்த பலவற்றுள்ளும் யாவற்றினும் கொண்டாடத்தக்கதாய் அவரிடம் அமைந்து கிடந்ததொரு குணந்தான் "உண்மைப்பொருளை யுணரவேண்டும்" என்பதே.

"பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானும் மாணாப் பிறப்பு."

என்ற திருவள்ளுவநாயனார் திருவாக்கைக் கடைப்பிடித்து உண்மைப் பொருளை உணர்ந்து பிறப்பறுக்கப்பாடுபட்டார்.

மக்கள் எய்துதற்குரிய அறம், பொருள், இன்பம், வீடு என்புவற்றுள் இவ்வீட்டுணர்ச்சியைச் சிறப்பித்ததென்னையெனின். பொருளும், இன்பமும் மக்கட்கேயன்றிப் பிற உயிர்ப்பொருள்கட்கும் உண்மையின் அந்நான்கனுள் அறமும், வீடும் சிறந்தன; அவற்றுள்ளும், வீட்டுணர்ச்சியில்லாதாரது அறம் உண்மையறம் ஆகாமையின், வீடு சிறப்புப்பெறுகின்றது. ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு வீட்டுணர்ச்சியுடையவனாகின்றானோ, அவ்வளவுக்கவ்வளவு அவன் அறவுணர்ச்சி சிறப்படையும்; ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு அறவுணர்ச்சியுடையவனாகின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் பொருளின்பங்கள் சிறப்படைகின்றன; ஆதலின் அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கனுள்ளும், மற்றை மூன்றனோடு இயைபுடையதாயும், மற்றை மூன்றினும் சிறந்ததாயு விளங்குவது வீட்டுணர்ச்சியேயாம். அத்தகைய வீட்டின் இயல்பறிய புகுவார்க்கு "வீடு என்பது ஒன்று உண்டு" எனவரும் நம்பிக்கையொன் றினாலே வரும் நன்மை பலவெனின், அவ்வீட்டுணர்ச்சி ஏறஏற அவ பெறும் நன்மையும், அவ்வீட்டுணர்ச்சி முற்றுப்பெறின் அவர்பெறு நன்மையும் அளவிடற்பாலதோ? ஆதலின் ஸ்ரீ பிள்ளையவர்களிட நான் கண்ட அக்குணம் ஒன்றினானே பிறகுணங்களைக்கூடக் காண்பவ னேன்.

இருபத்தேழு வயது நிரம்புவதற்குள் அவருக்கு நேரிட்டஎதி பாராத தேகவியோகமானது, மேல் அவர் சரித்திரத்தில் அவர் நூ பர்கள் "நல்லொழுக்கத்தைத் தாம் நடத்திக்காட்டினார்" என்று எழுதி படி, யாக்கை நிலையாமையையும் நடத்திக்காட்டியது போலவேயிருந் தென்று சொல்வதன்றி யாம் வேறு என்ன கூறுவோம்! ஒருவனு பிறப்பே இறப்பிற்கு அறிகுறியாயிருக்கும் இவ்வுலகத்து நாம் கூறுவதற் என்ன இருக்கின்றது!

அவர் யாக்கை நழுவினும் அவ்யாக்கை உள்ளபோதே அவர் தேடி கொண்ட நல்லொழுக்கமும், நல்ல நோக்கங்களும், நல்ல முயற்சிகளு அவரை அடைவிக்கவேண்டிய உயர்பதவியடைவித்தன்றி ஒருநாளு நழுவா என்பது எல்லா மதத்தினர்க்கும் ஒப்பமுடிந்த கொள்கையேயா

இந்நூலுள் வரும் ஸ்ரீ வேங்கடராமபிள்ளையவர்களது சரித்திரத்தை யும், மற்றப் பிரசங்கங்களையும் படிப்போர்க்கு அவர் குணாதிசயங்கள் மு வியன விளங்குமாயினும் இந்நூலை அச்சிடும் அவர் நண்பரது வேண் கோளை மறுக்கமாட்டாமையால், இம்முகவுரையை ஒருவாறு எழு லாயினேன்.

இங்ஙனம்,

வையை, R. சுப்பிரமணியையர்.

உ

திருச்சிற்றம்பலம்.

பட்டுக்கோட்டை, முருகமாவேளகம்,

ஸ்ரீமான் : வீ. வேங்கடராம பிள்ளையவர்கள்

வரலாறு.

....

இந்நில்வுலகின்கண் வாழும் மாந்தருட்பலரும் மாயை வயத்தராய்த் தமதுண்மையுணர்வழிந்து, பிறவிக்கடலூற்றும் ஆறு காணுதே மயங்கி நிற்பது இயல்பே. இங்ஙனம் இவர் பால்வகையான் மய விற்பட்டுச் செந்நெறி நீத்தொழுகி நிற்பினும், முன்னரியற்றிய நல் வினைப்பயனுக, உண்மையாறுணர்ந்து குணமென்னுங் குன்றேறி நின்ற பெரியோர் இவர்க்குத் துணையாதலுமுண்டு. இவ்வாறு துணையாயினர் சுட்டிய வழியே சேறின், மயக்கமுற்றூர் தெளிவு பெற்று குற்றத்தினீங்கி யின்பமெய்தல் ஒருதலையாம். இங்ஙனம் மயக்கியார்க்கு மருந்தெனத் தோற்றியாருள் ஸ்ரீமான் வீ. வேங்கடராமபிள்ளையவர்களும் ஒருவரேயாவர். நல்லார் குணங்களையும் சரித்திரத்தையும் உரைத்தலும் கேட்டலும் நன்றேயாகலான் கனம் பிள்ளையவர்களின் சரிதம் ஒருவாறு வகுக்கப்படுகின்றது.

பிறப்பு

பட்டுக்கோட்டை ஸ்ரீமான் வீராசாமி பிள்ளையவர்களும் அவர்தம் மனைவியராகிய அரங்கத்தம்மாளும் மனமொத்து இல் வாழ்க்கையென்னு மியல்புடைய வான்சகட்டை நல்லாற்றில் நடத்துநாளில் அவ்வில்வாழ்வு பயனுறுமாறு அவர் நோற்ற தவமே அவ்வம்மையார் முதற்கருப்பத்தினின்றும் சித்திரபானு வருடம் வைகாசிமீ ௨௯ (10—6—82) ஸ்திரவாரத்தன்று கந்தருவ கோட்டைக்கணித்தான மோகனூர் என்னும் பதியில் ஓர் குழவியுருவாய்ப் பரிணமித்ததெனப் பல்லார் புகழ ஸ்ரீமான் வேங்கடராமபிள்ளையவர்கள் தோன்றினர்.

கல்வி

கனம் பிள்ளையவர்கள் தமக்குச்சொந்த ஊராகிய பட்டுக்கோட்டையிலேயே தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் வித்தியாரம்பஞ்செய்யப் பெற்று, இளமையிலேயே சுறுசுறுப்பும் புத்திநுட்பமும், அடக்கமுமுடையராய் விளங்கினர். பின்னர், இவர் தந் [illegible]யாகிய ஸ்ரீமான் வீராசாமிபிள்ளையவர்கள் தஞ்சை, மகர்நோம்புச்

சாவடி சப் ரிஜிஸ்தரார் ஆபீசில் தலைமை குமாஸ்தாவாயிருந்தபடியால்
ஸ்ரீமான் வேங்கடராம பிள்ளையவர்கள் ஆங்கில பாஷாபிவிர்த்தியின்
பொருட்டுத் தஞ்சைக்கழைத்துவரப்பெற்றுப் பலகாலம் பேதுருகலாசா
லையிலும் சிலகாலம் கல்யாணசுந்தரம் பாடசாலையிலும் கல்வி பயின்றார்.
கனம் பிள்ளையவர்கள் சிறுபிராயமுதல் இயற்கையாகவே தமிழ்த்தாயிடத்
தன்பும் பிரியமும் கொண்டிருந்தபடியால், ஆங்கிலபாடசாலையில் படித்த
பொழுதும் அதிககாலத்தைத் தமிழ்நூலாராய்ச்சியிலேயே கழித்தார். இத
னாலேதான் இவர் ஆங்கிலங்கற்றது பிற்காலத்தில் பல ஆங்கிலசாத்திரங்
களைப் பார்க்கச் சாதனமாயிருந்தாலும், இவர் சர்வகலாசாலைப் பட்டம்
பெறக்கூடவில்லை. தமிழ் கற்பதில் இவர்க்கிருந்த ஊக்கத்திற்கும், ஆவ
லுக்கும் அளவில்லை. எந்த ஆசிரியரைக்கண்டாலும் அவரிடத்தெல்லாம்
தமிழ் பயிலவேண்டுமென்ற ஆவலே மேலிட்டிருந்தது. தேகசிரமத்தை
ஒருசிறிதுங் கவனியாது, ஆசிரியர் கட்டளையிட்டவிடத்திற்கு முன்
சென்று வரவேற்றிருப்பார். தமிழிடத்துள்ள அன்புமிகுதியால், தஞ்சை
யில் ஸ்ரீ பால்சுவாமிகள் மடத்ததிபதியாராகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ செல்லப்ப சுவா
மிகள், ஸ்ரீமத் குப்புசாமிராஜு அவர்கள், பிரம்மஸ்ரீ சேஷராம பாரதியா
ரவர்கள், ஸ்ரீமத். உலகநாதபிள்ளையவர்கள் ஆகிய இவ்வருங்கலைவல்ல
ஆசிரியரிடமும் பாடங்கேட்டுவந்தார். பின்னர், ஒரு சிலகாலம் மனஞ்
சலியாது வெயில், மழை முதலியவற்றையுங் கவனியாது தஞ்சைக்குமூன்
றுமைல் தூரத்திலுள்ள அம்மன்பேட்டைக்குப்போய், காலஞ்சென்ற அஷ்
டாவதானம் ஸ்ரீமத். இராமநாதஞ்செட்டியாரவர்களிடமும் கல்விபயின்று
வந்தார். சங்கநூல்களிலும், நவீன நூல்களிலும் தேர்ச்சிபெற்றதன்றி
வேதாந்த சித்தாந்த சோதிட சாத்திரங்களையும் ஆராய்ச்சிசெய்துவந்தார்.
இவற்றையெல்லாம் கசடறக்கற்றது தான் அதற்குத்தக நிற்றற்கும், தன்
னைத்தான் உள்ளபடியேயறிந்து உண்மைநிலை காண்டற்குமேயன்றி, மற்
றுப் புகழைக்கருதியும், கடம்படம் என்று உருட்டுதற்குமல்லவாம். எப்
பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருளின் மெய்ப்பொருள்
கண்டறிதலே இவரது பிரதமகொள்கையாயிருந்தது. தம்மகனை
அவையத்து முந்தியிருப்பச்செய்து தம் கடமையைச் செவ்வனே முடிப்ப
தே எண்ணியிருந்த இவர் தந்தையார், இவர் ஆங்கிலமொழியிற் போது
மான தேர்ச்சியுடையராயிருந்தும் பட்டம் பெருமைகுறித்து ஒருசிறிது
கவற்சியுற்றனராயினும், தமிழ்த்தாயிடத்துக்கொண்ட அன்பினுக்குவந்து
வேண்டுவனபுரிந்துதவியே வந்தனர். ஒருமுறை, இவர் மதுரைத்தமிழ்ச்
சங்கக்கலாசாலையிற்போய்ப் படிக்கவென வெண்ணங்கொண்டு, அதுவிஷ
யமாய் அச்சங்கத்தக்கிராசனாதிபதியைக் கண்டுவர மதுரைக்குப் போக
விரும்பினர். இவர் தந்தை அதற்கிசைந்து வேண்டிய பொருளுதவிதந்து,

அயரதச்சாலைமட்டுஞ்சென்று வழிகூட்டிவிட்டுத் திரும்பினர். அவ்வாறு ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத்தேவரவர்களைக்கண்டு திரும்பியும் சில இடையூறுகளால் இவர் மறுபடி மதுரைக்குப்போகவிருந்த எத்தனம் தடைப்பட்டது. தஞ்சைத் தமிழ்ச்சங்கப்பரீக்ஷையிற்றேறி திருவிளையாடற்புராணமும், வில்லிபுத்தூராழ்வார் பாரதமும பரிசுபெற்றதன்றி, இவர் தம் குணத்திற்கும், ஒழுக்கத்திற்கும், படிப்பின்திறத்திற்கும், பிரசங்க சக்திக்கும் யாவரும் மகிழ்ந்து, 'இவன்றந்தை என்னோற்றான்கொல்' என்றுசொல்லத் தலைப்பட்டாராக, தந்தைக்குச்செலுத்தவேண்டிய நன்றியைச்செலுத்தியவர் இவரேயன்றோ?

பிரசங்கசக்தி

இவர்தம் படிப்பின் மிகுதியும், அறிவுநுட்பமும், இவர்தம் பிரசங்கசக்தியினால்நன்கு விளங்கின. அவையிலுள்ளார் மனம் கரைந்துருகிச் சந்தோஷிக்கவும், 'என்னே! இவர் அறிவு. என்னே! இவர் திறமை' என்றதிசயித்துக் காக்கம்பஞ் சிரக்கம்பஞ்செய்து குதூகலிக்கவும் விஷயங்களை நன்கு கையாடி, பல்வகையாகக்கூறுபடுத்து யாவர் மனதிலும்பதியும்படி உத்திநியாயங்களோடு எடுத்துக் கூறுவார். ஒருமுறை இவர் உபந்நியசிக்கக்கேட்டார் இன்னும் பன்முறையுங் கேட்கவேண்டுமென ஆவலுறுவர். தமிழை வளர்க்கவேண்டி இவர்கொண்ட எண்ணத்திற்கு இச்சக்தி மிகுதியும் உதவியாயிருந்தது. இவர் பல சபைகளிலும் அங்கத்தினராயிருந்து பலர்க்கும் நல்வழிகளைப் போதித்துவந்தார்.

சம்பந்தப்பட்ட சபைகளும், பிரசங்கங்களும்

இவர் தஞ்சை 'ஸ்ரீ வித்தியாபிவர்த்தினி சபை'யின் அங்கமாயிருந்து ஸ்ரீ பார்ல்சுவாமிகள் மடத்தில் வாரந்தோறும் கூடுமச் சபையில், திருக்குறளின் அருமைப் பொருள்களையும் மற்றும்பல அருமையான விஷயங்களையும் யாவரும் கேட்டு வியக்கும்படி பிரசங்கித்து வந்தார். தஞ்சை கரந்தையில் ஸ்தாபிக்கப்பட்ட 'ஸ்ரீ வித்தியாப்பியாச சபை'யின் அக்கிராசனாதிபதித்துவத்தைப்பெற்று ஔவை நீதிமொழிகள் முதலியவற்றை நன்குவிளக்கி ஆன்றோரது பெருமையைச் சுட்டியுதவிபுரிந்து வந்ததன்றி, பாபவ ருஷ ஐப்பசி மீ ௰௯உ ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோவிலில் செண்ட்பீடர்ஸ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ R. சுப்பிரமணிய ஐயரவர்களது அக்கிராசனத்தின் கீழ் நடந்தேறிய 'மீனாக்ஷி சுந்தர நவராத்திரி தரும நிதி'யின் முதல் வருடோற்சவத்தன்று 'பக்தி' என்னும விஷயத்தைப்பற்றி யாவர் மனமுங் கரைந்துருகவெடுத்துரைத்தனர். இவர் மொழி கேட்டு யார்தான் பக்திநெறி தவறி யொழுகுவார்? பின்னரும் பிலவங்க ருஷ ஐப்பசி மீ ௰௮உ இரண்டாம் வருடோற்சவத்தன்று "நன்னெறி" என்னும் விஷயத்

தைப்பற்றிப் பேசி மகிழ்வித்தார். இஃதன்றியும், திரிசிரபுரம், தென்னூரில், மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவானும், எஸ். பி. ஜி. கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதராயுமிருந்த (காலஞ்சென்ற) ஸ்ரீமத். ஆ. காசிப்பிச்சைப் புராகீம் புலவரவர்களை அக்கிராசனாதிபதியாகக் கொண்டு தாபிக்கப்பட்ட "தென்னூர்த் தமிழபிவர்த்தனி சபையில்" பிலவங்கஸு புரட்டாசிமீ ௰௩உ (29—9—07) யன்று 'அன்பு' என்னும் விஷயத்தைப்பற்றி உபந்நியசித்தார். அன்று அக்கிராசனம் வகித்த அச்சபை உதவித் தலைவர் ஸ்ரீமத்: தி. கு. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் இவர்தம் பெருமையை மிகவும் புகழ்ந்து பாராட்டினார். பட்டுக்கோட்டையில் "ஸ்ரீ வித்தியாபிவர்த்தனி" "திருவருள் சமாசம்" என்னும் சபைகளை ஸ்தாபித்து நல்லோரிணக்கம் பெற்று அவர் மொழி கேட்டுத் தமிழைப்பெரிதும் போற்றிவளர்த்துவந்தனர். அன்றியும், கீலகஸு மார்கழிமீ ௨௪உயில் ஸ்ரீமான்: பொ. பாண்டித்துரைத்தேவரவர்களுக்கு கனுப்பிள்ளையவர்கள்வரைந்தனுப்பின திருமுகத்தால் பட்டுக்கோட்டையில் செந்தமிழ்க் கலாசாலையொன்று தாபித்து வைத்து அதில் கல்விபயின்று வரும் மாணவர்களை மதுரைச்சங்கத்தனித் தமிழ்ப் பரீட்சைகளுக்கு அனுப்பிவைக்கத்தாம் முயன்று வந்ததாகத் தெரிகிறது. யாவரும் சகோதர உரிமை பூண்டு வாழவேண்டுமென இவர் முன்னின்று தஞ்சையில் "கீழைத்தேயசகோதரசமாசம்" (The Oriental Brotherhood Society) என்றொரு சபையை ஏற்படுத்தி சகோதர நண்பரை யெல்லாம் மகிழ்வித்தார்.

பேர்[illegible]ரிணக்கம்

தமிழிற் பயிலுதலும், நல்லாசிரியரையடுத்து அவர்க்கு வேண்டுவன புரிதலும், மனமடங்கப்பெற்ற பெரியார்களோடு கூடியிருத்தலுமே இவர்க்குப் பொழுது போக்காயிருந்தன. எங்கேனும் தமிழ் வல்லாராவது, பெரியோராவது இருப்பது தெரிந்தால், அங்கே சென்று அவரைக்கண்டு உறவு கொள்ளுதலே இவருடைய முதற்கடமையாயிருந்தது. சோழவந்தான் வித்துவான் ஸ்ரீமத்: அ. சண்முகம்பிள்ளையவர்கள் தொல்காப்பியப்பாயிரவிருத்தி யச்சிடுதற் பொருட்டுத் தஞ்சையில் வந்திருந்த காலத்தும், அதற்கடுத்த அரித்துவாரமங்கலத்திலிருந்த காலத்தும், இவர் தம் வேலை முழுதும்மவிட்டு மிக்க உதவியாயிருந்தார். வைத்தியசாலையில் அவர் சிகிச்சையிலிருந்த காலத்தும் அவருடனேயே காலங்கழித்தார். சென்னை கிறிஸ்தவகலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்: வேதாசலம் பிள்ளையவர்களோடு நட்புரிமைபூண்டு, 'சைவசித்தாந்த மகாசமாச' விஷயமாகவும் சிரத்தை பாராட்டி வந்தார். தஞ்சை ஸ்ரீ பால்சுவாமிகள் மடத்திப்பிராஇப ஸ்ரீ-ல-ஸ்ரீ செல்லப்பசுவாமிகள் முதலியபெரியோரும் இவர்தந்திறத்தையும் பக்குவ நிலையையுங்கண்டு மிக்க அருள்கொண்டிருந்தார்கள்.

சமயம்

இவர் வைணவகுலத்திற் பிறந்தவராயினும் இவர் மதம் சைவமாகவே யிருந்தது. முருகபக்தியிற் சிறந்து விளங்கினுர். இவர் இல்லமும் 'முருகமாவேளகம்' என்றழைக்கபபடுவதே இதற்குறுசான்ரும். ஆயினும், இவர் ஒருபொழுதும் பரசமயதூஷணஞ் செய்யவர்வது, அங்ஙனஞ் செய் வாரது கொள்கைக்குச்செவி கொடுக்கவாவது சம்மதித்தவரில்லை. முன்கூறியபடி என்றும் உண்மை கண்டறிதலே இவர்து முக்கிய நோக்கமாயிருந்தது. பிரம்மஸ்ரீ சுப்பிரமணியையரவர்களது மனவமைதியையும் உண்மையுணர்சசியையும் கண்டு பேரன்பு கொண்டு அவர்களையே தமது ஞானசிரியராகப் பாவித்து அவர் அடிச்சுவடுபற்றியே ஒழுகி வந்தார். பிற்காலத்து ஒரு பொருளுணர்ச்சி வந்து பக்குவநிலையடைந்ததாகவும் தோற்றினுர்.

விவாகம் முதலியன

சோபகிருதுஞு ஆவணிமீ இவர்க்கும், இவரது பாக்கியமா யேற்பட்ட கற்புக்கரசியாகிய பாக்கியத்தம்மாளுக்கும் திருமணம் நடந்தேறியது. துறப்பதே இவரது முக்கிய நோக்கமாயிருந்தாலும், அதற்குத் தகுந்த சாதனங்களை இல்லறநிலையிலிருந்தே தேடிக்கொண்டு பக்குவப்பட்டபின்னரே துறவுபூணல் தகுதியென நினைந்து, 'என்று சமயம்வாய்க்கும்' என வெதிர் பார்த்துக்கொண்டேயிருந்தார். இல்லறத்திலிருந்த இவர்க்கு உலகத்துப்பழி நீக்கிப் புகழுண்டாதற்கென இறைவன்கீலகஞு மாசிமீ உகூ௳(11—3—09) இவர்க்கு ஓர் ஆண்மகவை அனுக்கிரகித்தனர். இம்மகவுக்குப் பெரியோர் சகந்நாதனென நாமஞ்சூட்டினர்.

உத்தியோகம்

இவர் சுற்றத்தார் பலரும் உத்தியோகத்திற்குப் போகவென வற்புறுத்த, தமிழ்ப்பாஷையில் மேன்மேலும் தேர்ச்சியடைய வேண்டுமெனக் கொண்ட எண்ணத்தாலும், தன் நன்முயற்சிகளுக்கெல்லாம் தக்க சாவகாசமும் சுவாதீனமும் வேண்டுமென்னு மெண்ணத்தாலும், உவாத்திமைத் தொழிலே சிறந்ததெனக்கொண்டு பட்டுக்கோட்டையிலுள்ள போர்டு பிரைமரி பாடசாலையில் உவாத்தியாயராயமர்ந்து வேலை பார்த்துவந்தார்.

இறப்பு

பின்னொரு நாள் தன் நண்பரையெல்லாம் பார்க்கவேண்டுமென்ற வெண்ணம் திடீரெனத் தோன்ற, இவர் தஞ்சைக்குவந்து தமது நண்பரையெல்லாம் பார்த்தளவளாவிக்கலந்து மகிழ்ந்து சிலநாள் தங்கியிருந்து, பின்னர், ஊருக்குத் திரும்பினர். ஊருக்குச் சென்ற மறுதினமே பித்தவாதசுரம் தொடங்கிச் சிலநாள் அசௌகரியமாயிருந்து நண்பர் சுற்றத்தார் பலரும் வருந்தி

யேங்கச் சௌமியஞு வைகாசிமீ ௰௨ (23—5—09) ஆதிவாரம் பூர்வபக்கச் சதுர்த்தி திதியும், புனர்பூச நக்ஷத்திரமுங் கூடிய தினத்தில் பகல் ௰௫ நாழிகைக்கு தமது 27-வது வயதில் சிவபத மடைந்தனர்.

நட்பின்றிறமும் குணாதிசயங் களும்

இவருடன் உறவுபூண்ட நண்பரெல்லாம் 'இனி, இவர்போன்ற நண்பரைக்காண்போமோ' என்று புலம்பி ஏங்குவர். நாயனார் வகுத்த நட்புக் குரிய இலக்கணங்களெல்லாம் இவரிடத்தே காணப்பட்டன. நண்பர்கள் துன்புறுவதையாவது, ஒரு சிறிதும் முறைபிறழ நடப்பதையாவது காண ஒருபோதும் மனஞ் சம்மதித்திரார். நண்பர்க்கெல்லாம் ஆனந்தசொரூபியாய்த் தோற்றியவர். அவர் தம் துன்பந்துடைத்தூன்றுந் தூணாயும் விளங்கியவர். அவ்வச்சமயங்களில் அவரவர் நடந்துகொள்ளுமாற்றைப்போதித்து மந்திரியொத்திருந்தவர். நல்லொழுக்கங்களை நடந்து போதித்தவர். சாந்தகுணபூடணர். வெகுளியை முழுதும் விட்டவர். நட்பிற்பிழைபொறுக்கும் அருமைக்குணம் வாய்ந்தவர். மனக்கோட்டமுற்று இவர்மீது குற்றங்காண வருவார்க்குச் சாமர்த்தியமாய் விடைபகர்ந்து அவர் வாயடக்கி வெட்கச்செய்வர். பிறருவப்பது செய்தலே தம் கடமையாக் கொண்டவர். தமது ஞானாசிரியரது பெருமையுணர்ந்தாராகலின், பிற்காலத்துத் தமது நண்பரையெல்லாம் அவரிடம் அழைத்துச்சென்று தரிசனஞ்செய்வித்து உறவுண்டாக்கி மகிழ்ந்தனர். நண்பரது இன்பதுன்பங்களைத் தம்மதாக்கொண்டவர். இனைய பல நற்குணங்களையுடையராகலின் விரிக்கிற்பெருகும்.

இவ்வாறு, தமது அருமைக்குணத்தினாலும், போதனையினாலும், சொல்லோடு ஒத்த தமது நடத்தையினாலும்எம்மையெல்லாம்உள்ளுருக்கிய ஸ்ரீமான் பிள்ளையவர்களது குணாதிசயங்களை எண்ணியும் சொல்லியும் வருதலல்லது, அவரைப்பிரிந்த எங்களுக்கு வேறு ஆறுதலுமில்லை; நட்பே வடிவாய் வந்த அவருக்கு யாங்கள் செய்யும் கைம்மாறும் பிறிதில்லை. ஆதலின், எங்களுக்குத் தெரிந்தவரையில் அவருடைய சரித்திரத்தை ஒருவாறு எழுதிமுடித்தோம்.

உ

திருச்சிற்றம்பலம்.

நட்பும், அதன் ஆராய்ச்சியும்.

"உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்." —திருக்குறள்.

அன்பர்காள்!

மன இயற்கையினும் சரீர அமைப்பினும் தம்முட் பெரிதும் ஒற்றுமைப்பட்டு வாழாநிற்கும் கூட்டத்தாருள்ளே தமிழரும் ஒருவரேயாவர். இனி, இயற்கையிலேயே அமைந்துகிடக்கும் ஒற்றுமை நயத்தைக் கண்டயாமெல்லாம் அதனை நாளும் பெருக்கி வலியுறுத்தற்பொருட்டே பலகாலும் ஒன்றுகூடி அளவளாவிக் கலந்து மகிழ்வேமாகினேம். இங்ஙனம் யாம் கூடும்கூட்டமும் 'சகோதர சமாசம்' என்று அழைக்கப்படுவதாயிற்று. * இச்சமாசம் ஏற்பட்டு இன்றோடு ஒருவருடமாயிற்றாக, அது குறித்து இன்று வருடோற்சவம் கொண்டாடவேண்டுமென்றும், அவ்வுற்சவத்தில் எமது நட்புப்பின்னும் மிகப்பருத்துக், கிளைத்துத், தழைத்தோங்கவேண்டி 'நட்பு' என்னும் விஷயத்தையே மிக எடுத்துப் பாராட்டிப் பேசவேண்டுமென்றும், எனது சகோதரநண்பரெல்லாம் தமியேற்கு ஒரு கட்டளை வகுத்தருளினர். இவ்வெளியேனும் அது செய்யவல்லனல்லனுந் தன்மையைச் செவ்வனம் அறிந்திருந்தும், அவர்தம் கட்டளையை மறுத்தற்கஞ்சி இங்கு சில சொல்ல எண்ணுகிறேன். எண்ணினும், ஏதேனுஞ் சிலவற்றைக் கட்டுரைத்தும் புதுப்பித்தும் கூற யான் ஒருபோதும் ஒருப்படேனாக; இனி, யான் சொல்லுவதெல்லாம் மிகச்சிலவேயாயினும், அவைதாமும் திருக்குறளென்னும் பொதுமறையை என் புல்லறிவுகொண்டு ஆராய்ந்தவழியென் புலப்பட்டனவேயன்றி மற்று வேறல்லனவாம்.

எனதருமை நேசர்காள்!

§ "அறையு மாடரங் குமடப் பிள்ளைக
டறையிற் கீறிடிற் றச்சருங் காய்வரோ."

என்பது கம்பநாட்டாழ்வார் திருவாக்கிற்போந்ததொரு குறிப்பாம். இக்

---

* இது தஞ்சை, கரந்தையில் 1906-௵ ஸ்தாபிக்கப்பட்ட "கீழைத்தேய சகோதர சமாசம்." (The Oriental Brotherhood Society.) என்பது.

§ கம்பராமாயணம்

குறிப்பை ஆழ்வார் வெளியிட்டமை தாம் எற்றுக்கோவெனின், அவைக்கண்ணே தாம் அடங்கிநிற்பதுணர்த்து முகத்தானே அவையடக்கம் கூறுதற்காமென்பது. இனி, இஃதெனின் மேலே ஆழ்வார் அவையடக்கமாகக்குறிப்பிட்ட சொற்றொடர்களின் பொருளைச் சிறிது விளங்கவிரித்துரைக்கவேண்டுமென்பாருக்கு அங்ஙனமே உரைக்கின்றோம்.

நண்பர்காள்! மேலே குறித்த திருவாக்கால் ஆழ்வார் அவையினுள்ளாரை முன்னிலையாக்கி "எமது அன்புமிக்க நண்பீர்! அவரவர் நாட்டும் பெயர்க்கும் பொருந்த அளவுகண்டறைகளை எடுத்தலும், ஆடரங்குக்கு விதித்த கோலுயரம், கோலகலம், கோனீளங்கண்டியற்றலும் அறியாத பேதைமைச் சிறுவிளையாட்டு மகார் தமக்குத்தோற்றியவாறெல்லாம் சிற்றில் கோலியும், பரதகூடமமைத்தும் விளையாடுதலைச் செய்யின், அது கண்ட சிற்பம் வல்லாரொருவர் 'அந்தோ! என்னை? இவரெல்லாம் மனைகோலுமுறையை அனுசரிக்காமலும், பரதசாத்திரவியல்பிற் பிறழ்ந்தும், தம்மனம்போனபடியெல்லாம் செய்கின்றாரே.' என்று பெரிதுஞ் சினந்து எனதருமைச் சிறுவிளையாட்டு மகாரைக் கண்டிக்கின்றமை காண்கிலேம். இனி, ஞானமொரு சிறிதுமின்மையானும், தெளிவில்லாப் புன்கவிகளையே செய்தமைத்தமையானும் அச்சிறு மகாரையே நிகர்த்து நிற்குமெம்மையு முறைநூலுணர்ந்த பேரறிவாளரெல்லாம் இழிவுபடுத்திக் கூறமனமொருப்படாரென் றெண்ணுகின்றோம்." என்று திருவாய்மலர்ந்தருளினமைபெற்றாம். இனி, இங்ஙனம் பெற்றதனாற்போந்த பயனென்னையோவெனின், கவிச்சக்கரவர்த்தியென்று விதந்தோதப்பெறு மடிகளே இப்படி அவையடக்கங்கூறிச் செல்லுமாயின், எம்போல்வார், அவையடக்கமாய்க்கூறுதற்கமையுஞ் சொற்களை எங்கே போய்ப்பொறுக்குவேம்? அந்தோ! ஆழ்வாரை நினைந்தப்பின் என்னையுமெண்ணுவனேல், எமக்கிடையேயுள்ள பேதந்தான் அண்டத்துக்குமணுவினுக்குமிடையேயிருப்பதைக்காட்டிலும் பெரிதாய்ப் பரந்திடுமே. ஆதலால், அவர்கூறிய அவையடக்கமிதுவென்பதே எமது அவையடக்கமாமென்பதேபயனுமென்பது.

நண்பர்காள்! இனி, நட்பெனுஞ் சொற்கேட்டலுமே அது கட்டையையும் கல்லையும்போலக் கட்புலனுக்கு விஷயமாகாததொரு பண்புப்பெயராமென்பது யாவருமறிவாராயினும், இதுபொழுது அதற்கும் மக்கட்கும் உள்ள சம்பந்தம் எவ்வகைப்படுவதென்பதைச்சிறிது ஆராய்வாம். இனி, ‡"அவாவென்னுந் தவாப்பிறப்பீனும்வித்து" என்றும், †"ஆசையெனும்பெருங்காற்றூடிலவம்பஞ்செனவுமனதலையும்" என்றும், எழுந்த திரு

‡ திருக்குறள்   † தாயுமானவர்

வாக்குகளை உற்றுநோக்குமிடத்து, யாமெல்லாம் ஆசையாலேயே பிறந்து ஆசையிலேயே நிலைத்து ஆசையினுள்ளேயே ஒடுங்குவது பெறப்படுமன்றோ? இனி, இவ்வாசையின் ஒரு திரிபுபட்ட அவசரமே நட்பெனப்படும். என்னை? இவ்வாசைதான் எழுந்து மனையாட்டியும் மக்களுமுதலிய தொடர்புடையாரைப் பிணிக்கும்போது அன்பு என்றும், சமப்படுத்தி எல்லோரையும் ஒருங்கு பிணிக்கும்போது அருள் என்றும், கடவுளருகே போம்போது பக்தி என்றும் அழைக்கப்படுவதுபோல் ஈண்டு ஆராய்ந்தெடுத்த ஒருவர்மாட்டுச் செல்லும்போது நட்பு எனப்படுமென்க.

இனி, நம்மிற்பலரும் பலபல நண்பர்களை உடைத்தாயிருப்பதாக எண்ணினும் எண்ணுவர். அந்தோ! இவ்வுலகமெல்லாந் துருவித்துருவிப்பார்ப்பினும் ஒரோ ஓர் நண்பர்தானகப்படுகின்றனரோ இலரோ அறியேன். என்னை? ஆசிரியர் பரிமேலழகியார் கூறுவதுபோல நட்புச் செய்தற்கு ஆவாரைப் பெறுதலும் பெற்றால் திரிபின்றி நிற்றலு முதலிய மிக அருமையினுமருமையாமாதலின், இந்நிலவுலகத்து மாந்தர் முயன்று பெறக்கிடப்பதனுளெல்லாம் மிகக்கடினவகையாற் பெறக்கிடப்பது நட்பு ஒன்றே எனப் பறைசாற்றுதலையுஞ் செய்யலாம். இனி, நட்புச்செய்தற்கு ஆவாரைப் பெறுமாறு தெரியாதார் சிலர் கண்டாரையெல்லாம் நண்பரெனக்கொண்டு, பின் அவர் நட்பு இடையில் பயன்படாதொழிதல்கண்டு, ஏதோ தம்மனுபவத்திற்காணாததொன்றைக்கண்டாற்போல "Familiarity breeds contempt" என்றும், "பழகப்பழகப்பாலும்புளிக்கும்" என்றும், "கடுஞ்சினேகம் கண்ணைக்குத்தும்" என்றும் உலகியலில் வழங்கப்பட்டு வரும் சில சொற்றொடர்களைச் சான்றுகாட்டி, எவரோடும் நெருங்கிப்பழகலாகாதெனக் கூறினும் கூறுவர். அந்தோ! அவர்கூறும் வெற்றுரை கண்டு யாமெல்லாமஞ்சாதொழிவேமாக. என்னை? நட்புச்செய்தற்கு ஆவாரைப்பெற்று நட்புக்கொள்வேமானால் அவர் நட்பு நெருங்கிய பழக்கத்தால் குறைதலைச் செய்யுமா? செய்யுமே நல்லார் கேண்மை பிறைச்சந்திரன் நாளுக்குநாள் பெருகி வளருவதுபோல பழகப்பழகப்பெருகி வளருமென்பதுதோன்ற "நீரவர் கேண்மை பிறைநிறை நீர" என்று எழுந்த பொதுமறைக் கூற்றுதான் என்ன பயத்ததாம். இம்மட்டோ? இன்னும் நட்புச்செய்தற்கு ஆவாரை மட்டும் தெரிந்து நட்புச்செய்வேமானால், ஆ! அவர் நட்பு பழகப்பழக ஒரு நூலைக் கற்குந்தொறும் கற்குந்தொறும் அது தன்னைக் கற்பாருக்கு இன்பஞ்செய்தலைப் போலன்றோ இன்பஞ்செய்விக்கும் பெற்றித்தாம். இனி, இவற்றையெல்லாமுணராமல் கூறப்படும் "பழகப்பழகப்பாலும்புளிக்கும்" என்றற்றொடக்கத்து வாக்கியங்கள் எம்மை என்ன செய்யமாட்டும்? கனவான்களே! மறித்

துமொருமுறை கூறுகின்றேன்; மன்னிக்கவேண்டும். நட்புச்செய்தற்கு ஆவாரைப்பெறுதல்மட்டும் மிக அருமையினுமருமையாம். ஆ! ஆ!! பெறுவமேல், பின் அவரால் எய்தும் பயனை என்னென்பேன்? நம்மனம் போகும் போக்கையறிந்து, நம்மனம் கோணுவகை பேசி, நம்மை நகுவிக்கும் தன்மையோ அவர் தன்மை?' யாம் ஒருவனைச்சுட்டி "அவன் கொடியனல்லனோ?" வெனில், நம் கருத்தறிந்து உடனே அவரும், "ஆம், அதில் என்னதடை? அவன் கொடுமை கூறக் கூற்றுக் கொள்ளுமா? எழுத ஏடு அடங்குமா?" என்பர். பின்னர் யாம் இடைமறித்து; "என்ன ஐயா! அவன் கொடியனேயாயினும் அவன்பாற்சில நற்குணங்கள் காணப்படுவது கண்டீரா?" என்றால், அவரும் ஆமெனச் சிரமசைத்து அதனையுமறிவேனென்பர். அந்தோ! இப்பெற்றித்தாயார் நட்பையோ யாம் ஈண்டு நட்பென விதந்தெடுத்துக் கூறுகின்றேம்? இல்லை! இல்லை!! இல்லையே!!! ஈண்டு நண்பரெனக் கூறப்படும் நன்மக்களெல்லாம் நாம் நம்வசமிழந்து வினைவசப்பட்டு ஒரோவழி நமக்கே பழியும் பாவமும் செய்யும் நெறிவழிப்படுவேமானால், அவர் நம்மினும் விரைந்துபோய், நம்மை இடைமறித்து நின்று, நமக்கு இனிய சொல்லி, நாமந்நெறிப்படாவகை பார்ப்பர். நாம் இன்சொல்லுக்கு இணங்காத காலத்து இடித்து இடித்துக் கூறியேனும் நம்மை அந்நெறியினின்றும் விலக்குவிப்பரே! இங்ஙனமாய இவர் கருணைக்குப்பிரதிசெய்வான் உளது எவன்? ஒன்றுமேயில்லையன்றோ!

இனி, இது கேட்டு, நட்புச்செய்தற்கு ஆவாரைப்பெறுதல் எவர்க்கும் இன்றியமையாததொன்றே யாமெனினும் பெற்றபினவரைப் பலநாட் கண்டும், சொல்லாடியும், மருவியன்றோ, அந்நட்பை நிலைபெறுத்த வேண்டுமென எண்ணுதல் வேண்டப்படுதலில்லையாம். என்னை? நட்பு நிலை பெறுதற்கு உடனுறைதலும் பழகுதலுமின்றி, கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையாருக்கும் போல உணர்ச்சியொத்தல் ஒன்றுமே போதுமென்பது தோன்ற "§ புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்பாங்கிழமை தரும்" என்றாராதலின் என்பது. இனி பெரியோர்காள்! இவ்வாறு நிலைபெற்றுவழங்கும் நண்பர் தாம் ¶ "முன்மலர்ந்து பிற்கூம்புவாரையும்", ‡ "அற்றகுளத்தினறுநீர்ப் பறவையையும்" போலாது பிறைச்சந்திரன் தன்கலையை நாளும் வளர்ப்பதுபோல தம் நட்பை நாளும் வளர்த்தும், நமக்கு ஒரோ வழி தெய்வத்தால் கேடுவரின் அது நீக்கப்படாமையின் நம்முடனே கூட அதனைத்தானு மனுபவித்து வருந்தியும், § "உடுக்கையிழந்தவன் கைபோல இடுக்கண்களைந்தும்" நிற்பர் என்ப

§ திருக்குறள் ¶ நாலடியார் ‡ மூதுரை

தன்றிப் பின்னையான் அவர் இலக்கணத்தை என்னென்று கூறுவேன்? இனி, ஒருவாற்றானும் கூறவல்லேனல்லேன். ஆகவே, நண்பர், நண்பரியல்பு முதலிய இவற்றையெல்லாம் இங்ஙனே விடுத்து இனி நண்பரை ஆராய்ந்து தெளிதல் எங்ஙனமென்பது குறித்துச் சிறிது கவனிப்பாம். அங்ஙனம் கவனிப்புழி ‡ "விலங்கிற்கும் விள்ளலரிது" என்றும், ¶ "பேயோடாயினும் பிரிதல் இன்னாதே" என்றும் பாம்பொடு பழகினும் பிரிதல் இன்மையாம்" என்றும் கூறப்படுவதை நோக்க, ஆய்ந்தல்லால் ஒருவரிடத்து நட்புச்கொள்ளுதல் கூடாதென்பது பெறப்படும். இனி, ஆய்ந்துபார்ப்பதுதான் எதனையெனில், ஒருவர்க்குள்ள குணத்தையும், குடிமையையும், குற்றத்தையும், இனத்தையும், என்ற இந்நான்கனையுமென்பது. "இனி குணத்தையும், குடிமையையும் இனத்தையும் ஆராயவேண்டுவது பொருந்தும். இவையன்றிக்குற்றத்தை ஆராயவேண்டுமென்ற தென்னை? குற்றமுடையார் நண்பராதற்குரியராதல் எங்ஙனம் பொருந்தும்?" என்பாருக்கெல்லாம் ‡ "நெல்லுக்குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு புல்லிதழ்பூவிற்குமுண்"டாக இந்நிலவுலகத்தில் குற்றமே இலாரைப் பெறுதல் எவர்க்கும் கூடாததாம். இதனாலன்றோ † "குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள், மிகைநாடி மிக்க கொளல்" என்ற திருவாக்கெழுந்திட்டது என்றிறுத்து அவருடன்பாடும் பெறுவோம். இனி, குற்றத்தை ஆராயப்போந்தவழி மக்கட்கென அமைந்துகிடக்கும் இயற்கைக் குற்றத்துக்கு மேற்படுங்குற்றம் கண்டவழியெல்லாம், அவர் நட்பைத் தீநட்பென்றுதல், கூடா நட்பென்றுதல், தள்ளவேண்டும். இதுகிடக்க, இனமுடையாரை ஆராய்ந்து நட்புக்கொள்வோமாயின் அவர் நம்மோடே நட்பினாற் பிணிபட்டு நிற்பது கண்டு அவரினத்தாரும் நம்மோடு நட்புக்கொள்ளவருவாராக, அவ்வினமுடையார் நட்பு வேண்டப்படுவதாயிற்று. குணமுடையார் பழிக்கு அஞ்சுவாராக, நாம் அறியாது பிழைத்தன பொறுப்பராகலின் அவர் நட்பும் அங்ஙனமே வேண்டப்படுவதொன்றாயிற்று. இவையன்றி குடிப்பிறந்தார்தாம் பிழை செய்தலில்லையாக, அவர் நட்பும் வேண்டப்படுமென்க. இனி, இங்ஙனம் ஆராய்ந்து கொள்ளப்பட்டாரது நட்பு பெரும்பாலும் ஈண்டு விதந்தெடுத்துக் கூறப்படும் நன்னட்பின்பாற்படுதற்கே உரியதாம். ஒரோவழி இதன்பாற்படுமோபடாதோவென ஐயுறப்படுமேல் இதனை அளந்துகாண ஓர் அளவுகருவியுமுண்டாக, அதனாலளந்து இவர் தன்மை தெரிந்து தெளிதலுங்கூடும். இனி, அவ்வளவு கருவிதான் என்னையோவெனின் † "கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை நீட்டி யளப்பதோர் கோல்" என்றாராகலின் அது நமக்கு இயற்கையானே உண்டாகும்

‡ நாலடியார். ¶ பழமொழி. † திருக்குறள்.

கேடு என்பது. இதுகாறும் நல்லார்போலே எண்ணப்பட்டு நண்பரா யிருந்தாருள் இவ்வளவுகருவி கொண்டு காணும்போது பேதையாரென மறிவிலிகளும், வலியார்போலே காணப்பட்டுப்பின் நமக்குத்துன்பம்வந்த வழி நம்மிற்பிரிவாரும், பொருளும் செல்வாக்கு முள்ளளவும் நம்மோ டிருந்து பின்னவை நீங்க நீங்குவாரும் எனவிம்முத்திறத்தினரும் தாமே நீங்கிப்போதல் காண்பேம். அந்தோ! இவர் நீக்கமே நமக்கு பெரியதோரு றுதிபயப்பதாம்.

நண்பர்காள்! இவரது நட்பை உயிர்கோறற்கு எமன் வந்து எதிர் நிற்கும் அப்பொழுது நினைத்தாலுங் கூட அதுதான் அங்ஙனம் நினைந்த அவ்வுள்ளத்தையுஞ் சுட்டுவருத்துமே! இனியாமும் இவரை இங்ஙனே நீக்கிவிட்டு மேற்செல்வேமாக. இனி, முன்னரே இதுகிடக்க எனவிடுத்து வைத்த தீ நட்பையுங் கூடாநட்பையும் சிறிது சிறிது கவனிப்பாம். அங்ஙனம் கவனிப்பதற்குத் தீநட்பையுடையாரும் கூடா நட்புடையாரும் இவரிவரெனத் தெரிதல்வேண்டும். இனி, அவர் முன்னரே நமது அளவு கருவிகொண்டு அளந்துநீத்தபேதையாரும், அல்லற்கண் ஆற்றறுப்பாரும், தொலைவிற்றுணையாகாதாரும் என இம்மூவரோடே உறுவது பார்ப்பாரும், வெறிதேநகுவிப்பாரும், வஞ்சரும் என இம்மூவருஞ்சேர அவற்றின் பாற்படுவார் அறுவராவர். இவருள்பேதையார் நட்பைக்காட்டிலும் அறிவுடையார் பகைமை நன்றெனல் கூடும். என்னை? அறிவுடையார் பகைமை நமக்கொரு தீங்கையும் செய்யாதிருக்கவும் பேதையார் நட்புப்பலவாற்றானும் துன்புறுத்துவது காணுகின்றேமல்லவா? அதனாலென்பது. இனி, அல்லற்கண் ஆற்றறுப்பார் நமக்குத்துன்பம் நேர்ந்தவழி நம்மிற் பிரிந்து போவாராவர். ஆகவே, இவரியல்புகூற, இவர் நட்புவேண்டப்படாததாயிற்று. தொலைவிற்றுணையாகாதார் அற்றகுளத்தில் அறுநீர்ப்பறவை போல நமது பொருள்வற்றியவழி நம்மிற் பிரிந்துபோவாராவர். இவர் நட்பைச்சுட்டித்தான் பொய்யாமொழிப்புலவர் ¶"கூற்றடுங்காலை உள்ளினும் உள்ளஞ்சுடு" மென்றார். எனவே, இவர்நட்பும் வேண்டப்படாததாயிற்று. உறுவது பார்ப்பார் நட்பளவு பாராது, அதனால் தான் பெறவிருக்கும் பயனளவு ஒன்றைமட்டுங் கருதி அதுபெறுமளவும் நட்புக் கொண்டாடிப்பின் நீங்குவாராவர். ஆகவே, இவரை என்னென்பேம்? பொருள் கொடுக்கும் மனிதனை கவனியாது அவன் கொடுக்கும் பொருளில் மட்டுங்கண் வைத்தொழுகும் விலைமாதர் எனும் வேசையர்க்கும் இவர்க்குமுள்ள பேதந்தான் என்னையோ? ஒன்றுமேயில்லையாக, இவரை விரும்பி நட்புக்கொள்ளுவோர் வேசையை விரும்புந்தூர்த்தராவர். ஆக

¶ திருக்குறள்.

வின் இவர் நட்பும் வேண்டப்படாததுகண்டேம். வெறிதே நகுவிப்பது ‡ "நகுதற்பொருட்டன்று நட்பு" என்றதிருவாக்கைக்கொண்டுநோக்க, அடி ஒழிந்திடுமாக, இதனையும் நட்பன்றென்றே மறுக்கமுற்படுவேன். இனி வஞ்சரெனப்படுவோர், ஏதேனும் ஒரு பகைகாரணமாக அகத்தாற் கூடா திருந்து தம்பகைக்கு மாறுசெய்வது வாய்க்குமிடம் பெறுந்துணையும் புறத் தால்மட்டும் கூடிப்பொழுகும் கூடாநட்பினராவர். ஆகவே, என்னதான் கற்றாலும் பகைவர் மனந்திருந்தி நட்புக்கொள்ளுதல் ஒருபொழுதுமில் லையாக, இவரைச் சொல்வணக்கங் கொண்டும் செய்கைவணக்கம் கொண் டும் நல்லாரெனத்தெளிதல் கூடாது. இவர் பகைக்கு மாறு செய்யும் எண்ணத்தை மனத்திற்கொண்டு வெளியில்மட்டும் மிக வணக்கமாய்ப் பேசுவர். ஒரோவழி கரங்குவித்துவணங்குதலையுஞ்செய்வர். இம்மட்டோ? இன்னும் மேற்போகி துன்பத்திற்கு ஆற்றாதார்போன்று கண்ணீர்பெருக்கி அழினும் அழுவர். அந்தோ! இவரது இத்தகைய படிற்றொழுக்கம் கண்டு அஞ்சாதிருக்க எல்லாம்வல்ல கடவுளை யான் இதுபொழுது பிரார்த்தித்து வணங்குகின்றேன். இது நிற்க, இனி, வில் வணக்கம் அதனையுடையா னுக்குக் குறித்தது முடிக்கச்சாதனமாவதுபோல அவரது சொல்வணக்க மும், அவர்க்கே சாதனமாமன்றி நமக்கு எட்டுணையும் நன்றி பயப்பதின் றாம் என்க. இன்னும் அவர்தொழுங் கையிடத்தும், அழுங்கண்ணீரகத் தும் நம்மைக்கொல்லுதற்கான கொடுவாளை மறைத்து வைத்திருப்ப ரென்பது தோன்றவே ‡ "தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன் னார், அழுதகண் ணீரு மனைத்து" என்றார் நாயனாரும். எனவே, இவர் நட்பும் கூடாதென்பது பெற்றாம்.

இதுகிடக்க. இனி இங்ஙன மெல்லாமாராய்ந்து தீநட்பினரையும் கூடாநட்பினரையுந்தள்ளிக் குணனே, குடிப்பிறப்பே, இனனே என இவை யுடையாரைத்தழுவியாத்தநட்பு எம்மால் எஞ்ஞான்றும் விடற்பாற்றன்று. இங்ஙனம் யாக்கப்பட்ட நண்பரெல்லாம் ஒரோவழி உரிமைபற்றிநமக்கு வேண்டியன தாமேகொள்ளினும் கொள்ளுவர். இதுகண்ட உத்தமநண்பர் இன்புறுவரேயன்றி வேறு நினையார். என்னை? ‡ "இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று, புனையினும் புல்லென்னும் நட்பு" என்றதிருக்குறளின் உண்மைகண்டபின் தன்னையும்நண்பரையும் வேறுபிரித்துக்காணுவாருமு ளரோ? இலராக, அவர்செய்ததையெல்லாந்தான்செய்ததாகவே கொண்டு மகிழ்வாரென்க. இனி, நல்லநண்பரை என்று பெறுவேம், எங்ஙனம் பெறு வேமென்ற கவற்சி எவர்க்குமேவேண்டுவதில்லை. என்னை? பொன்னே, துகிரே, முத்தே, மணியே எனஎல்லாராலும் பெரிதுபாராட்டிப்பேசப்படு

‡ திருக்குறள்.

மிவையெல்லாம் வேறு வேறிடங்களிலே பிறந்து வேறுவேறாய்க்கிடப் பினும் பணிசெய்யப்புகுவான் ஒரு பொற்கொல்லன் இவற்றையெல்லாம் ஒன்றுபடப்புணர்ப்பது காணுகின்றேமன்றோ? அதுவேபோல, என்றும் சான்றோர் சான்றோர் பாலர் ஆகுபவே என்பது. இதனாலன்றோ,

"பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியு
மிடைபட்ச் சேய வாயினுந் துடைபுணர்ந்
தருவிலை நன்கல னமைக்குங் காலை
யொருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பாலரா குபவே."

என்றார் புறநானூற்றிலும்.

இனி, நாமெல்லாம் நட்புக்கொள்ளுதற்கு ஆவாரைப்பெறுதற்கு முன்னரே நன்னண்பரிலக்கணத்தை நம்முளமைத்துக்கொள்ள முயல வேண்டுமென்று விஷயத்தை நிறுத்துகிறேன்.

திருச்சிற்றம்பலம்.

மாணுடம்பெற்றேமாகலாய.

அன்பர்காள்!

யான் சென்றவருடத்து* முத்தியல் இச்சபை† காரணமாக இங்கு வந்திருந்ததை நண்பர் பலர் அறிவர். அங்ஙனம் யான் வந்திருந்த காலத்தே இச்சங்கத்து அங்கத்தினருள் ஒருவர் என்னோடு அப்பொழுது தான் நட்புரிமை பூண்டு அதனை மிகப்பழையதொன்றுபோலப் பெரிதும் பாராட்டிப் பேசின பேச்சு, ஆ! இன்னும் என் மனத்தைவிட்டகன்றிற் றில்லையே! இனி, அத்தகைய நண்பரதுபெயரை எண்டுக்கூறுதலுங் குற்றமாமாறில்லையாதலால், அவர் கனம் நடராசமுதலியார் என்று பெயர் கூறப்படுவாரென்கின்றேன். எனவே, நண்பர்காள்! அதிலும் இச்சங் கத்து அங்கத்தினிர்காள்! உங்களுக்கெல்லாம் என்னைப்போலவே இது பொழுது மனத்தகத்து ஒரு பெருஞ் சலிப்புண்டாகவில்லையா? இனி,

"மனக்கினிய மொழியுடையாய் மதனமதிப் பொலிவுடையாய் வணக்கமுள்ளாய்
எனக்கினிய மகன்போல்வா யின்றுமனை விடுத்துவெளி யேகுங் காலைக்
கனக்குமின தொருமரணம் யான்கேட்டு மனங்கலங்கிக் கவலின் வில்லா
டனக்குரைத்துக் கரைந்தனனே நடராஜ மணியேயிக் காண்ட லென்றே" என்றும்
"என்பானன் கமைதியொடு பயின்ற தன்மையிலா மிதியங் தோன்றும்
மன்பாவில் வமையமென தகங்கரைத லறியாயோ வையா நீதான்
முன்பாலென் றனைப்புலவா ரின்புறுப்பப் யாக்கனிஞன் மொழிந்தா யின்று
நின்பாலத் தகைமொழியா தருந்துயரங் கருப்பாவா னிகழ்த்தி னேனே," என்றும்,

வெளிவந்த சரமகவிகள்தாமே நம்மை நோக்குவாரை யெல்லாம் பெரிதும் நோவுறச்செய்யுந்தன்மையவெனில், இனி, அவற்றை யாத்தருளிய இச்சங்கத் தலைவர்தமக்குண்டாந் துக்கத்தை அளவிட்டுக் கூறுதல் கூடுவதொன்றோ? யார் வருந்தித் துக்கமெய்தினூற்றா னென்னை?

§ "ஊரெல்லாங் கூடி யொலிக்க வழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே."

---

* பிலவங்க வருடம் (1907).

† திரிசிரபுரம், தென்னூரில், சாலஞ்சென்ற மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் ஸ்ரீமத் ஆ. கா. பிச்சைபிள்ளைப் புலவரவர்களை அக்கிராசனாதிபதியாகக்கொண்டு தாபிக்கப் பெற்ற "தென்னூர்த் தமிழபிவிர்த்தனி சங்கம்" என்னும் சபை.

§ திருமந்திரம்.

என்றபடி அன்றும் எல்லோரும் ஒன்றுகூடிப்போய்ச் சுட்டிட்டு நீரினில் மூழ்கி நினைப்பொழிந்து, இன்னும் நமது அற்புத வைராக்கிய சுத்த சிவ ஞான சிரேட்ட வள்ளலாரான பட்டினத்தடிகள் தாம் தமது அருமைத் திருவாயைத் திறந்து,

"முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணா வதுகண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொனி னம்பலவ
ரடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே."

என்ற திருவாக்குக் கிலக்காயினேமேயன்றி மற்றும் நமக்கும் அங்ஙனமே கூற்றுவன் அறக்கொடியனாகிக் கொலைத்தொழிற் கருவி சூழ்ந்து மாற்ற ரும் வலைவைத்திருப்பதையுணர்ந்து அதிற்றப்பிப் போமாற்றைத் துணிந் து காணத் தலைப்பட்டோமில்லையே.

இனி, இங்ஙனம் துணிந்து காணாமே நாமெல்லாம வெறிதே குழ விப்பருவத்தையும், பிள்ளைப் பருவத்தையும், காளைப்பருவத்தையும் முறைமுறையே எய்திப்பின் கிழவுத்தன்மையினையு மடையப்போ மியல் பினமாயிருக்கின்றேமென்றும், இன்னும் நமது அறியாமையாற் பிறந்த ஆசையைப் பெருக்கி நடந்துபோய்த் துன்பமாப் பெருங்கடலினு ளழுந் தியே கிடந்து மாண்டுபோந் தன்மையமாயு மிருக்கின்றேமென்றும், நம் புலப்படுத்துவான் வேண்டியே தேவரும்* இந்த நமது உடலை,

‡ "குழவிதா றெழுந்து காளைக் கொழுங்கதி ரீன்று பின்னாட்
கிழவுதான் விளைக்கும் பைங்கூழ்" என்றும்,

‡ "பேதைமை யென்னும் வித்திற் பிறந்துபின் வினைக ளென்னும்
வேதனை மரக்கணாறி வேட்கைவேர் வீழ்த்து முற்றிக்
காதலுங் களிப்பு மென்னுங் கவடுவிட் டவலம் பூத்து
மாதுய ரிடும்பை காய்த்து மரணமே கனியு மென்றாள்." என்றும்,

அருளிச்செய்வாராயினர். இனி, இவ்வாறே பலபல பேசிக்கொண்டு போதலாலாவதென்னை? வீணிற் சொல்பல்குதலுங் காலங் கழிதலுமே இதனாற் போதரும் பயனுமாதலால் இவை கிடப்ப இனி மானுடத்தின் அருமைபெருமை முதலியவற்றையெல்லாம் விரைவிலாராய்ந்துபின் அவ் வரும்பெரும் மானுடத்தாற் பெறக்கடவதனையுஞ் சடுதியிலாராய்வாம்.

இனி, நமது மணிவாசகப்பெருமானார் புல்லாகிப் பூடாகியென்று தொடங்கிக் கல்லாய் மனிதராயெனத் திருவாய் மலர்ந்தருளிச் செல்லு தலை நோக்குமிடத்து, நாமெல்லாம் ஒருசிலகாலம் புல்லாயும், ஒருசிலகா லம் பூடாயும், ஒருசிலகாலம் புழுவாயும், ஒருசிலகாலம் பறவையாயும்,

* திருத்தக்கதேவர். ‡ சீவகசிந்தாமணி.

ஒருசில்காலம் மிருகமாயும், ஒருசிலகாலம் கல்லாயும் இருந்து இதுபொழுதே மானிடராயினே மென்பது போதரும். போதரவே, இப்படி ஒன்றிலொன்றுயர்ந்த மிகப்பலவான யோனிகளின் வாய்ப்பட்டுத் தங்கித் தங்கிச் செல்கின்றுழி, ஆண்டாண்டும் புண்ணிய கன்மங்களை மிகவுக்கி யாற்றிவந்திவண் மானுடம் பெறுதல்மிக அருமையினு மருமையா மென்பதுபெற்றாம். இதனானன்றே சிந்தாமணி ஆசிரியரும்,

"பார்வைவெண் டினைவடகடற்படுநுகத் துளையுட்
டிரைசெய்தென் கடலிட்ட தோர்நோன் கழிசிவண்
யாசவத் துளையகயிற்செறிந் தெனவரிதாற்
பெரியயோனிகள்பிழைத்திவண் மானிடம்பெறலே" என்றருளுவாராயினர்.

இனி, அரிதிற்பெறப்படுவனவெலாம் எல்லாராலுங் கொண்டாடப்பட்டுப்பெருமையின்பாற்படுதற்குரியவாதல் எவருக்குமொப்பமுடிந்ததோருண்மையாமாதலாற்றவம்பலவியற்றிப் பவம்பலதொலைத்து மிக அருமையாய்ப்பெற்ற இம்மானுடமும் அங்ஙனமே கொண்டாடப்பட்டுப் பெருமையின்பாற்படுதல் சொல்லாமலே விளங்காநிற்கும். ஏற்பின், ஒரு சிலர் மக்களிற்றேவரே உயர்ந்தாரெனக் காண்கின்றாமோவெனில்: அது நுணுகி ஆராயாதார் கூற்றேயாமென்றொழிக. என்னை? சுகத்தை விரும்பிக் கொள்ளுதலும், அசுகத்தை வெறுத்துத் தள்ளுதலும், ஆன்மாக்களின் சுபாவகுணமாக, ஒரு மானிடன் இம்மையின்பத்திற் பெரிது மறுமையின்பமெனக்கண்டு அது பெறுவதற்கான சற்கருமஞ் செய்துபோய்த் தேவனாகின்றான். பின், 'அந்தோ! யான் அறியாது மோசம்போயினனே! இவ்வின்பத்தைப்பெரிதாயெண்ணியது எனதுபேதைமைமதியாலன்றோ? இதிற்பெரிதாய் வீட்டின்பமொன்றிருக்கின்றதே; இனி அதுபெற மானிடருரியராவரன்றி நாம் உரியேமல்லேமே' என்றிப்படியெல்லாம் சிந்தித்து ஆண்டும்போய் மனச்சலிப்புடையனாகின்றானன்றி மனமடங்கிச் சுகமெய்தி மேம்படுகின்றானில்லை. நமக்கோ அவர் விரும்பியும் பெறலாகாத வீட்டின்பம் மிக அணித்தாமாகையாலும், சிறிது முயன்றால் அவரையெல்லாம் பணியாளராக்கிக் கோடலுங் கூடுமென்பதற்குறு சான்றாய், 'விண்ணவரை யேவல்கொளலாம்'† என்றோர் திருவாக்கெழுந்து நிற்பக் காண்கின்றாமாகலானும், யாமே அவரினும் மேம்பாடுடையேமென்க. எனவே, மானுடம் பெருமையின்பாற்படுதலும் பெற்றாம்.

இனி, இந்த நமதுடலித்துணைச் சிறப்பினதாவதூஉ மிதுதானுயிரோடுகூடிநிற்கு மத்துணைமட்டுமேயன்றி மற்று உயிரிற்பிரிந்த அக்கணமே இது இழிவினும் இழிவாய் எண்ணப்படும். என்னை?

† தாயுமானவர்.

‡ "குடமுடைந்தாலவையோடென் றுவைப்ப
ருடலுடைந்தாலிறைப்போதும்வையாரே." என்பவாகலான்.
இனி, இது உயிரோடு கூடியிருக்குங்காலந்தான் எத்துணையதென்பீராகின், அந்தோ!

¶ "மணமகனே பிணமகனும் மணப்பறையே பிணப்பறையா
யணியிழையார் வாழ்த்தொலிபோ யழுகையொலி யாய்க்கழியக்
கணமதனிற் பிறந்திறக்கு மிக்காயம்."

எனவுமோருறுதிவாக் கெழுந்தமையான், இது நெடுங்காலங்கூடி நிற்பது போலத் தோன்றிக் காலம் வந்துழிச் சடுதியிற் பிரிந்துபோமாதலாலிம் மானுடத்தின் அருமை பெருமையோடொப்ப இதன் நிலையாமையையுங் கூட்டியுணர்ந்து பின்னிதனாற் செய்யத்தகுவதைச் செய்யவேண்டும்.

இனி, "செழுநவையறுவைசாணியுவர்செறிவித்தழுக்கை.முழுவதும் கழிப்பன்மாயைகொடுமலமொழிப்பன்முன்னேன்" என்னும் உறுதி மொழியை நோக்குமிடத்து, அழுக்கேறிய ஆடையிலுள்ள கறைபோக்குதற்பொருட்டு வண்ணான் உழமண் முதலிய சேர்த்து ஆடையொலித்துப் பரிசுத்தஞ்செய்யுமாப்போலே, நாமும் ஆணவக்கறையை நீக்கிப் பிறப்பற்றுப் பரிசுத்தமாதற்கு ஒருபெருஞ் சாதனமாகவே இச்சரீரம் நமக்கு இறைவனாற்றரப்பட்டமை காண்பாமாகையான், இம்மானுடத்தை இடும்பையெல்லாம் நீக்குதற்குக் காரணமான ஒரு பிறப்பறுக்கும் மருந்தெனக்கொண்டு அதுகொடு ஈண்டுவீணே ஒருவரொருவரொடு செற்றங்கொண்டு கலாம்பல விளைத்துத் தமக்கும் பிறர்க்குங் கேடுசூழாதே, ஒருவரொருவரொடுகூடி அறிவுடையராய் அதனால் அன்புநிகழப்பெற்றப்பின் அவ்வன்பு துணையாக இறைவனடிக்கட்சென்றங் கிருமாந்திருத்தலே மானுடத்தின் அருமைபெருமையோடொப்ப அதன் நிலையாமையையுங் கூட்டியுணர்ந்தார் செய்யத்தகுவதாம்.

இனி, இத்தகுவதனைச் செவ்விதினறிந்து செய்யுமாறுணரமாட்டாதே ஒரு சாரார், மானுடம்பெற்றது பிறப்பறுக்கவென ஞானசிரியனிடமானதின்பின் ஒரு சிறிதும் தாமதியாமல் எல்லாவற்றையுமுவர்த்து நீத்த துறவியாகிக் காடடைந்து சாகுபட்சணமுதலிய செய்து தனியேயிருந்து தவமியற்றவேண்டுமென்பர். அவர் கூற்றுச் சாத்திரசம்மதத்தினோடியையபுடையதன்றென மறுக்கப்படுமாகையானது ஈண்டைக்கேற்புடையதொன்றன்றாம். என்னை? நீதிநூல் தான், § "முப்பதாமாண்டளவின் மூன்றற்றொருபொருளைநாட வேண்டிற்றென்பவாகலான், ஒருவன் அறவழியாற்பொருளையீட்டி, அதுகொடு நன்மாண்பொலிகுழலாளொருத்தி

‡ திருவிளையாடற்புராணம். ¶ திருமந்திரம். § நீதிவெண்பா.

யைமணந்து, அவ்விலங்கிழைதன்னால் நுகரக்கிடந்த இன்பம் நுகர்ந்து, அங்ஙனம் நுகர்ந்த அவ்வின்பத்திற் பெரியதோரின்பமிருக்கின்றமை தெளிந்து அதுகாதலித்தவிருப்பம் பையப்பைய முதிரப்பெற்றுப்பின்,

> ¶ 'மூர்த்திதலந் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர்
> வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.''

என்ற மூதறிஞர் சொற்களைப்பிடித்து ஸ்தலயாத்திரை செய்ய ஒருப்பட்டு நடந்து ஒரு சற்குருவையடைந்து அவரை வழிபட்டு அவர் சொல்லும் ஒருமொழி வலிகொடுபோயிறைவனடி சார்ந்தங் கிருமாந்திருத்தல் வேண்டும். இதுவே முறையாம். இதனையே நம்முன்னோருமனுட்டித்து நடந்தார். என்னை? முற்காலத்து மன்னர் பலரும் இப்படியே தாங்சற்கக் கட்டவசற்று, ஒரு கட்டழகியை மணந்து, ஒருசிலகாலஞ் செங்கோலோச்சி, அதன்பின் தவவழிப்பட்டிருத்தல் அவர்தம் சரிதைகளையெல்லா மாராய்வேமென்று புகுவாருக்கு வெள்ளிடைமலைபோல் விளங்கிக்கிடந்த வுறுதியாமாதலால், அத்துறைத்தனத்தையே பலவாற்றானுமொத்தியையுமிக் குடித்தனக்காரர்களாகிய நாமும் அம்முறையையே மேற்கொண்டேற்றுச் சிவபேறுற்றிருமாப்பெய்த வேண்டுதல் ஒருதலையாம். இனி, அச்சிவமே அன்பாகியும் அன்பே சிவமாகியும் நிற்கின்றமையானும், சான்றோர் பலரும்,

> ‡ ''ஐயன்தான் யாது செய்வான் அன்பிலர்க் கெளிய னாமோ
> மெய்யதா மன்பே யின்னே மேவிலன் போலும்.'' என்றும்,
>
> ‡ என்பெலா முருக நாடி யிருகணீர் சொரியத் தேடி
> யன்பினா லழுது வாடி யழைத்திட்டால் விரைவி லோடி
> இன்பெலா மொன்றாய்க் கூட்டி யெடுத்ததோர் வடிவங் காட்டித்
> தன்பதஞ் சூட்டு கின்ற தயவன்றோ வையன் றன்மை''.

என்றும், வாய்விட்டுக் கதறுதலுங் கதறினர்களாகையானும், அம்முறையேற்றுப்பின் அன்பாறுயொழுக வேண்டுவதே கடன்முறையாம்.

இனி, அவ்வன்பைத் தோற்றுவிப்பது யாதோவெனில், அன்பே அன்பைத் தோற்றுவிக்கும். என்னை? ஸ்ரீமான் பண்டிதர் வேதாசலம் பிள்ளையவர்கள் தமது ஞானசாகர வாயிலால் வெளியிட்டபடி மடமானையுங்கொல்புலியையு மொன்றுசேர்த்தவழி அவை தம்மில் மாறுபட்ட சுபாவமுடையவாகையால் அவை ஒன்றோடொன்று பொருந்தமாட்டா. மற்றுமானையுமானையு மொன்றுசேர்த்தவழி அவையிரண்டும் ஒற்றுமைப்படுதல்போல அன்பும் அன்புமே ஒன்றுபடுமாகலின் அன்பே அன்பைத்

¶ தாயுமானவர்

‡ திருவருட் கைவல்யம். தஞ்சை எஸ். பி. ஜி. ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் பிரம்-ஸ்ரீ சுப்பிரமணிய அய்யரவர்களால் இயற்றப்பெற்றது.

தோற்றுவிக்கும் எனப்பட்டது. படவே, நம்பில் அன்புடையார் மாட்டே நமக்குமன்பு நிகழப்பெறுமென்பது பெற்றும். இனி, நம்பால் அன்புடையார் யாவரோவெனில், அவரெல்லாம் நம்மோடியைபுடைய தாய், தந்தை பெண்டு. பிள்ளை முதலிய இவர்களேயாமென்பது. இனி, இறைவனடி சேருதற்கு இன்றியமையாது வேண்டப்படும் அன்பைப்பெருக்கிக்கோடற் பொருட்டே நீதிநூல் இவரோடெல்லாம் ஒரு முப்பது வருடமளவு மிருந்து பழகிவரவேண்டிற்று.

இனி, இவ்வியைபுடையார் மாட்டுப்பழகிவருதலாலன்புதான் பெருகிவிரியுமாறும், அப்பெருகியவன்பால் இறைவனடிசேரப்போமாறும் எங்ஙனமெனிலோ. நண்பர்காள்! ஈண்டும் பிள்ளையவர்கள் கருத்தையே வலியுறுத்துக்கூற விரும்புகிறேன். என்னை? நாமெல்லாம் பாச்சி, சோச்சியெனப்படும் மெய்பெரு மழலைச்சொல்லுடைப் பச்சைப்பசுங்குழவியாயிருந்த பருவத்திலே நம்மைக் கருணை ததும்ப எடுத்துப் பாலூட்டி வளர்த்த நம் அம்மையின் முதிர்ந்த அன்பை அறிந்து அறிந்து அவளிடத்தன்புடையேமாயினேம். அதன்பின், பிள்ளையாய் வளர்ந்த பருவத்திலே நமக்கு வேண்டுவன தந்து கல்விபயிற்றுவதற்காவன செய்துவந்த நமது தந்தையின் அன்பு நிலையை அறிந்து அறிந்து அவரிடத்தன்புடையேமாயினேம். அதன்பின் கலாசாலையிலே நமக்கு அறிவுநூல் பல போதித்து வைத்த ஆசிரியரது தண்ணளிகண்டு அவர்பாலன்பு செலுத்துவேமாயினேம். அதன்பின் அப்பருவத்தே நம்மோடு தோழமை கொண்ட நண்பர் தம் அன்பின் திறத்தை யுணர்ந்துவுணர்ந்து அவர்மாட்டும் அன்பு நிகழப்பெற்றேம். அதன்பின் காளைப்பருவத்திலே ஒருமடக்கொடியை மணந்து அவள் நம்பால் வைத்தொழுகும் காதற்கிழமையினை நினைந்து அவளோடொன்றுபட்டன்பாயினேம். ஆகவே, இப்படி நமதன்பு முறை முறையே முதிருமென்பது. இனி, இங்ஙனம் முதிருந்தோறும் முதிருந்தோறும் அறிவும் மேலும் மேலும் மிக்குவிளங்குமாகலின், அவ்வறிவால் முன்பு அன்பு செய்யப்பட்டாரெல்லாம் நிலையின்றி அழிந்துபோம் சரீரத்திற்றோன்றியும் மறைந்தும் போகுஞ் சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய சாமானிய ஆன்மாக்களென்று கழித்து, இனி, இவ்வான்மாக்களையெல்லாம் அறிவித்துப் பேருபகாரமியற்றி நடக்கும் முழுமுதற் சிவபரம்பொருளொன்றே நம்மால் அன்புசெயத் தகுவதாதல் தெளிந்து அதன்பின் நல்ல சற்குருவை நாடுவான் வேண்டி திவ்விய தலயாத்திரை செய்ய ஒருப்படுவேம்.

இனி, அந்த யாத்திரை உத்தியோக மாத்திரையாலே ஒருவனுக்கு இகபோக வெறுப்பும் பரவாழ்வின் விருப்பும் உதிக்குங்கால், அவன் தன்

வாசஸ்தலம்விட்டு, அன்னிய ஸ்தலங்களுக்கு யாத்திரை போக மனம் ஒருப்பட்டு, சில நியம சங்கற்பத்தோடு வெளிப்புறப்பட்டு நடக்கிறான். இனி, அங்ஙனம் நடக்குமவன் அந்நியஸ்தலங்களையடைந்து அங்கங்கு தங்கிச்செல்கின்றுழி ஆண்டாண்டு, நேர்தரும் மலை, கடல், ஆறு, முதலியனவும், மக்கள், விலங்கு, புள், மரமும் பிறவுமாகிய தெய்வசிருட்டி வைபவங்கள் பலகண்டு மிக்க அதிசயமனத்தனாய் அமலசின்மய முதல்வனது அளவில் அறிவாற்றலை நினைந்துபோற்றி அப்பிரமபரன்பால் முன்னையினும் அன்புவழிபாடு மிகவுடையனாகின்றான். அதுவொன்றோ? அங்கங்கே தான் சந்திக்கும் நல்லோர் பலருடன் லோக வியாபார இயற்கைகளையும், ஆன்மலாப சாதனங்களையும், அறிந்து ஆனந்தமடைகின்றான். அம்மட்டோ? அவன் யாத்திரை குறித்தெழுவதற்கு முன்னர்த் தன்னூரிற் பற்றியிருந்த பந்துக்கள் முதலிய உயிர்ப்பற்றும், வீடு, விளைநில முதலிய பொருட்பற்றும், மென்மேலத் துறந்து, பின் அவைபற்றிவருங் கவலைகளுந் துக்கங்களும் பெரிதுமிலனாகின்றான். இதனானன்றோ,

"யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்."

எனப் பொதுமறையுங்கூறுவதாயிற்று. இனி, முன்னெல்லாம் தான் கண்டதே கண்டும், கேட்டதே கேட்டும், உண்டதே உண்டும், மோந்ததேமோந்தும், உடுத்ததே உடுத்தும் அவைதன் முயற்சியால் வருவனவென்று ஐம்புலவழியைநம்பி அதிலேநின்ற அவன் அவை ஆண்டாண்டும் புதிதுபுதிதாய்ப் பலவாறு விடாது பொருந்தித் தனக்கு அனுபவமாதல் கண்டு, 'பண்டைவினைக்கீடாக பரமன் கூட்டியூட்டுமாறிதுவாகும். நம்முயற்சியால் நாட்டப்படுவதன்று இந்நுகர்ச்சி' எனத்தெளிந்து அப்பேறுபற்றி விருப்புவெறுப்பிலனாகின்றான். ஆகவே, இவற்றையெல்லாமுணராமல் தாந்தாம் பிறந்த ஸ்தலங்களிலேயே அபிமானித்துவிடாதுபற்றி யாமெல்லாமிருந்துகொண்டுலகவின்ப மெய்துகின்றாமெனிலோ? அதுபெறுவதன்று,

‡"வருந்துவ தளவோ யில்லை வந்தசிற் றின்பந் தானு
மிருந்ததன் சுவடு மாய்ந்து வந்ததன் வழியுந் தூர்ந்து
பொருந்துபொன் னுனை மனதைக் குரங்காக்கிப் போகு மந்தோ!'

அதனால், ‡நம்மையும் வளர்த்துத் தானும் வளர்கின்ற வின்பம் விட்டு
நம்மைய மழித்துத் தானு மழிகின்ற வின்பம் நாடி
செம்மையாம் விறகு மாய்த்துத் தானுமாய் கின்ற தீப்போல்
நம்மையே தின்று தின்று நாட்களைக் கழிக்க லாமோ"

என்பவாகலான். அங்ஙனமிருந்துகொண் டுலகவின்ப மெய்துகின்றோமெனத்தாந்தாம் பிறந்த பிறந்த ஸ்தலங்களிற்றானே மடங்கிக் கிடப்பா

‡ திருவருட்கைவல்யம்.

ரெல்லாம், மற்றை மிருக முதலிய சங்கமங்களிலெல்லாம் தாழ்ந்தாராதலொன்றோ? இன்னும் ஸ்தாவரங்களினுங் கடையாய்த் தம் உயர்பிறவியை விருதாவாகக் கழித்துப் பழிக்கவும்படுதலுறுதியாமாதலா லவரெல்லாமங்ஙனே பழிக்கப்பட்டொழிய. இனி, அரசருள்ளும், அந்தணருள்ளும், ஏனையோருள்ளும், தாம் விரும்பிய இம்மைப் பெரும்பேறுகளும், மறுமைப் பெரும்பேறுகளும், பரவீட்டின் வாழ்வும், விரும்பியவாறுவாய்ப்பப் பெற்று வாழ்வின் மேம்பட்டாரெவரென்று தெரியப்புகின், அவரெல்லாம் திவ்வியஸ்தலயாத்திரை மெய்பெறச் செய்துபோந்த விரதியர்களேயாமென்பதினிதறியக் கிடத்தல் காண்பாம். இனி, 'கொட்டிக் கொட்டி அளந்தாலும் குறுணி பதக்காகப் போமாறில்லை' யாகலான் மிக விரியப்பேசுதலைவிட்டு சுருங்கச் சொல்லுதலை மேற்கொண்டேற்புழி, எனதருமை நண்பர்காள்! வீடுபேறு காதலித்த விவேக விளக்கமுடைய நமதுசைவமாப் பெருங்குரவர் நால்வருங்கூட இப்படி ஸ்தலயாத்திரை செய்தே பூரணமைந்த வாழ்வையடைந்தார்களாகையால், நாமும் அச்சன் மார்க்கத்தையே கடைப்பிடித்தொழுகுவேமாக.

இது நிற்க, இனி, அன்பர்காள்! நமது மத இரகசியங்களெல்லாம், அவை பொதிந்த உண்மை நூல்கள் பலவற்றையும் நம்மவர்கள் பிரீதியோடு கல்லாமையானும், எங்கேனுஞ் சிலர் கற்றாலும் பிறர்க்குக் கற்பித்தலும் யாவருமறியப் பிரசங்கித்தலுஞ் செய்யாமையானும் இக்காலத்தில் தம் விளக்கம் மிகக் குன்றுவதாயின. இதுவேயுமன்றி, நமது சைவ சமயப் பானுவின் பெரிய ஞானப்பிரகாசத்தாலடங்கி வலிகெட்டு ஒடுங்கிக் கிடந்த பரசமயகணங்கள் இது விளக்கங்குன்றுமிவ் வற்றநோக்கி வெளிவந்து தலையெடுத்துத் தன் தோற்றங்காட்டுகின்றனவாதலால், நம்மவர்கள் இனியாதல் தூங்காமல் விழித்துக்கொள்ள வேண்டியும், ஒன்றுக்கும் பற்றாத யானே இப்படி ஓரவைக்களத்துச்சென்று பிதற்றத்துணிந்தமையை யறிந்து விவேக விளக்கமுடையாரெல்லாந் தாந்தாமும் பேரவைகளின் உயர்தலங்களில் நின்று நமது சமய உண்மைகள் பலவற்றையும் வெளிப்படுக்க வேண்டியும். இன்று யான், மானுடம் பெறுதற்கு மிக அரியதொன்றென்றும், அரிதிற்பெறக்கிடைக்குமது பெருமையின்பாற் படுதற்குரியதென்றும், அருமை பெருமை வாய்ந்திருப்பினும் அது சடுதியிலழிந்துபோம் பெற்றித்தென்றும், அதன் அருமைபெருமையோடொப்ப அதன் நிலையாமையையுங்கூட்டி புணர்வாரெல்லாமதனாற் பெறத்தகுவதைப் பெறவேண்டுமென்றும், அதனாற்பெறத்தகுவது அந்தமிலின்பத் தழிவில்வீடென்றும், அதுபெற அறவழியாற் பொருளீட்டி இன்பநுகர்ந்து யாத்திரை போகி குருவையடைந்து ஒருமொழி பெறவேண்டுமென்றும், இத்தா சிலபல பிதற்றுவேனாயினேன்.

இது கிடக்க, இனி, செந்தமிழ் நண்பர்காள்! நமது அன்பர்கள் மேற்கொண்டு நடாத்தி வரும் இச்சபையாட்சி இம்மை மறுமை உறுதிப் பேறுகள் எல்லாவற்றிற்கும் ஏதுவாகும். என்னை? நமது சமயாதீத சச்சிதானந்தப் பழம்பொருளான பரமசிவனும், ஆன்மகோடிகள் உய்யும் பொருட்டு சிதம்பர மகாசபையை இடமாகக்கொண்டு மாஞான நடராச மூர்த்தியாய் ஆனந்தத்தாண்டவங் குயிற்றியருளுமாயின், சபையின் மான்மியம் இனைத்தென்றளவிட்டுரைத்தல் எனக்குமாத்திரமன்று யாவர்க்குமே முடிவதன்றாதலான், என் உயிர் நண்பர் சிலர் முன்வந்து முற்காலத்துத் தென்னவரே இக்காலத்துத் தென்னாரராயினுரென்னும்படி நமது தென் மொழியை வளர்க்கவேண்டித் தாபித்துவைத்த இச்சபைக்கும் வேண்டுவன புரிந்துதவுமாறு உங்களையெல்லாம் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுந்துணையானே எனதிந்த உபந்நியாசத்தை முடித்துக்கொள்ளுகிறேன்.

உ

திருச்சிற்றம்பலம்.

பெரியாரைத் துணைக்கோடல்.

* தெய்வங்கண் டாலொரு கோடியென் பாரவை செய்வசெய்க
உய்வதென் ருலொன் றுங் காணுத வென்னை யொருபொருளாய்ச்
செய்வதென் றேயொரு சங்கணைப் பூண்டு திகழுகின்ற
தெய்வமொன் றேயன்றி யானிதி யேன்பிற தெய்வங்களே.

அன்பர்காள்! எனதருமைச் சகோதரர்காள்!

பாருங்கள்! நாம் இச்சபையைத் தாபித்த நாள் நல்லதாயிருந்தமை
யாலோ, அன்றி இவ்வூர் செய்த புண்ணியத்தாலோ, எப்படியோ, காணு
தற்கரிய பெரியாரையெல்லாம் கண்டோம்; கேட்டற்கரிய விஷயங்களை
யெல்லாம் கேட்டோம். ஆகவே, இனி இப்படியே நாளும், நாளும், நல்ல
பெரியாரையே கண்டு கண்டு, அவரையே துணையாக்கொண்டுய்யவேண்டு
மென்கின்ற நல்ல எண்ணமாகிய ஒருவிதை நமது மனதில் பதிக்கப்பட்
டிருக்கவேண்டுமென்றெண்ணுகிறேன். இப்படி நல்ல எண்ணம் உண்டா
வதுதான் கஷ்டமேயொழிய உள்ளபடியே ஒரு நல்ல எண்ணம் உண்டாகி
விட்டால் பின் அதனைக்கெடுக்க எத்தனையோபேர் தலைகீழாய்நின்று முயன்
ருலும் அம்முயற்சிகளையெல்லாம் அதுபின்னும் தான் வளமாய் வளருவ
தற்குச் சாதனங்களாய்க் கொண்டு மேலும் மேலும் ஓங்கி வளருமேயன்றி
கெட்டு ஒழியப்போதல் ஒருபோதுமில்லை. நீங்கள் மலைக்கவேண்டாம். என்
ன பாருங்கள்! நல்ல மண்ணில் ஒருவிதையைப்பதித்து விட்டபின் அதன்
தலையில் மண்ணைத்தள்ளி அதன்மேல் குப்பை கூளங்களை அள்ளிப்போட்டு,
இன்னும் போதாததற்கு நீரைப்பெய்தாலும், அது இவைகளையெல்லாம்
தான் வளமாய் வளருவதற்கு ஒருபெரும் சாதனமாய்க்கொண்டு நன்ருய்த்
தலையெடுத்து ஓங்கி வளருமேயன்றி, மற்று ஒருபோதும் வளராமல் அழிந்
துபோகிறதில்லையாம். இதுவேபோல, நண்பர்காள்! பெரியாரைக்
காணவேண்டுமென்றும், அவரையே துணையாக்கொண்டுய்ய வேண்டு
மென்றும், எழுந்த நல்ல எண்ணத்தை நாம் பட்டும் செவ்வை
யாய் மனத்திற் பதித்துவிடுவோமாளுல் அது ஒருபோதும்கெடாமல்,
இன்னும் கெடுக்க முயல்வார் முயற்சிகளையெல்லாம் தான் வளமாய் வள

---

* திருவருளந்தாதி.

ருவதற்கு ஒரு சாதனமாய்க்கொண்டு பெரிதும் ஓங்கி வளராநிற்கும். ஆகவே, யானும் அது மறித்தும் தழைத்துக், கிளைத்துப், பூத்துக்கனியும்படி இன்று பெரியாரைத் துணைக்கொள்ளும் ஆற்றை ஒரு சிறிது விளக்கிச் சொல்லவிரும்புகிறேன். விரும்பினும், நண்பர்காள்! பெரியாரியல் பேசுதற்குப் பெரிதாம்; நினைத்தற்கு அரிதாமெனப்பலசான்றோரும் பறைசாற்றி முழங்காநிற்கவும் ஒன்றுக்கும் பற்றாத ஒரு நாயடியேன் எங்ஙனம் சொல்லமாட்டுவேன்? சொல்வேனென்று புகுந்தாலும் அது சொல்ல என்னுடைய ஒரு நா போதுவதொன்றாமா? என் செய்வேன்? தொடங்கின காரியத்தை இடையில் விட்டுவிடுதல் இழுக்காமாதலால் தனியாச் சொல்லவல்லனல்லனாயினும் ஏதோ தெய்வப்புலமைத் திருவள்ளுவனாருதவிகொண்டு சில சொல்கின்றேன். இனிக்கண்டீரன்றே! இவனோ சிறியன்! இவன் அறிவோ இவனினும் சிறிது! இவன் நா அதனினுஞ் சிறிது! அது துணையாக்கொண்டதோ ஒரு குறளாயிராநின்றது! இங்ஙனமாக, இவன் பெரியாரியல் பேசத்துணிந்ததுதான் என்னை? என்னை? என்று பரிகசித்து நகையாடாமல் ஒரு சிறிதுநேரம் சாவதானமாயிருந்து கேட்டருளவேண்டுகின்றேன்.

இது நிற்க.

* "சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனு
மங்குவா ரவர்செல்வ மதிப்போ மல்லோ
மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகி
லங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யரா
யாவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகி
லவர்கண்டீர் யாம்வணங்குங் கடவு ளாரே."

என்று பெரியார் அருளியபடி, பெரியாராவார் இறைவனருளையெய்தி எல்லாப்பற்றும் அற்றாரே என்பதூஉம்,

$ "அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டா
லின்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே."

என்றபடி அப்பெரியாருக்கு ஆட்பட்டு அவரைத் துணையாகக் கோடலே நாம் பேரின்பமெய்தும் வழியென்பதூஉம், அப்பெரியாரெல்லாரும் அருளிச்செய்த உண்மைகளாயிராநின்றன.

* திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம். $ தாயுமானவர்.

இனி, நண்பர்காள்! எனதருமைச் சகோதரர்காள்! தத்தமக்குரிய ஒழுக்கத்தின் கண்ணே ஒருசிலகாலம் நின்று பின் துறவுநிலையெய்தியாரே பெரியாரென்றும், இவ்வுலகத்து மேலான பெருமைகள் பலவற்றுள்ளும் அவர் பெருமையே மிக மேலாந்தரத்ததென எல்லா நூல்களும், சாத்திரங்களும். மறைகளும் தம்மில் ஒன்றுகூடிக் கோஷிக்கின்றனவென்றும், அறிவிப்பான் வேண்டி நமது நாயனார்,

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு."

என்னுந் திருக்குறளைத் திருவாய்மலர்ந்தருளினார். தமக்குரிய ஒழுக்கத்தின்கண்ணே நின்று துறவெய்த வேண்டுமென்ற நாயனார் உண்மைக் கருத்தை உள்ளபடியே நமக்கறிவிக்க முன்வந்த ஆசிரியர் பரிமேலழகியார் நுண்ணறிவையும் பேராற்றலையும் என்னென்பேன்? பாருங்கள்! அவருரைச்சிறப்புத்தான்,

§ "பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ — நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி."

என்று எழுந்த வெண்பாவால் வெள்ளிடை மலைபோல் வெளியாயிற்றன்றே. இன்னும், நண்பர்காள்! ஓரிடத்து நமது உமாபதிசிவாசாரியார் "தெள்ளு பரிமே லழக ருரை" என்று பாராட்டினமையும், நோக்கத்தக்கது. இஃதன்றி. இவ்வாசிரியர் பரிமேலழகியாரே,

"கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை."

என்ற திருக்குறளின் விசேடவுரையில் இறைவனது எண்குணங்களையும் சைவாகமத்திற்கூறியபடியே கொண்டு கூறினதையும் சுட்டிச்சுட்டி இவரைச் சைவரேயெனத் தாபித்திடுவார் சைவர். வைணவரெல்லாம், இறைமாட்சி அதிகாரத்தின் அவதாரிகையிலே மன்னவரெல்லாம் உலகபாலர் உருவாய் நின்று உலகங் காத்தலின் இறையெனப்படுவார் என்பதற்கு மேற்கோளாக "திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேன்" என்று பெரியாரும் பணித்தாரென நம்மாழ்வாரைப் பெரியாரெனப் பாராட்டினமையைச் சுட்டி இவர் வைணவரே என்று வாதிப்பார். இன்னும். இப்படியே பிறசமயத்தாரும் வேறு சிலகாட்டி இவர் தத்தம் சமயத்துக்கே உரியாரெனக் கூறிக்குதூகலிப்பர். ஆகவே, இந்த ஆசிரி

§ திருக்குறள் உரைச் சிறப்புப்பாயிரம்.

யர் பரிமேலழகியார் எமது இறைவனைப்போலவே அவரவர்க்கு அவரவராயிருந்து விளங்கும் பெற்றியர் எனில், இனி, அவர் பெருமை சொல்லுதற்கு எளிதாமோ? அன்றி இன்னும் இவர் பெருமையே பேசிக்கொண்டு செல்வோமானல் அது ஒரு தனி உபந்நியாசமாய் வளர்ந்திடுமென்றஞ்சி இதனை இம்மட்டோடே விடுத்து, இனி, இவர் தமக்குரிய ஒழுக்கத்து நின்று துறத்தல் என்பதற்குச் செய்த வியாக்கியானத்தை மட்டுஞ் சொல்கின்றேன்.

என்ன.—"அவரவரும் தத்தம்வருணத்திற்கும் நிலைக்கும் உரிய ஒழுக்கங்களில் வழுவாதொழுக அறம் வளரும். அறம்வளரவளரப் பாவம் தானேதேயும். பாவம் தேய்ந்து இல்லையாகவே அறியாமை நீங்கும். அறியாமை நீங்கவே நித்த அநித்தங்களது வேறுபாட்டுணர்வும், அழிதன்மாலையவாய இம்மை மறுமையின்பங்களின் உவர்ப்பும், பிறவித்துன்பங்களுந் தோன்றும். அவைதோன்ற வீட்டின்கண் ஆசையுண்டாம். அஃதுண்டாகப் பிறவிக்காரணமாகிய பயனில் முயற்சிகளெல்லாம் நீங்கி வீட்டிற்குக் காரணமாகிய யோகமுயற்சியுண்டாம். அஃதுண்டாக மெய்யுணர்வுபிறந்து புறப்பற்றாகிய எனதென்பதும் அகப்பற்றாகிய யான் என்பதும் விடும். ஆகலான், இவ்விரண்டுபற்றையும் இம்முறையே உவர்த்து விடுதலே துறவறமெனக்கொள்க" என்கின்றார். எனவே, நண்பர்காள்! துறவென்பது நாமே உண்டுபண்ணிக் கொள்ளும் ஒரு நிலையென்பதில்லை. தானே உண்டாம் ஒரு பக்குவநிலையென்பது பெற்றாம். நண்பர்காள்! நீங்களெல்லாம் என்னிற்குறைந்த அறிவுடையவர்களில்லையென்றாக யான் உங்களுக்கு என்னசொல்வேன்? என்றாலும், நீங்கள் சூழ்ந்து கண்டதனையே மறித்துஞ்சொல்கின்றேன். பாருங்கள்! ஒரு பழந்தான் அந்நிலையை யடைதற்கு எப்படியிருக்கவேண்டும்? தான் பூவாகிப் பிஞ்சாகிக் காயாகிப்பின் பழமாமட்டும் தான் இருந்த இலைதழைகிளைகளோடுகூடி மரத்திலேயே நிலைத்து இருக்கவேண்டுமாம். பின், நையப்பழுத்தபின் பெரும்பாலும் தானே அம்மரத்தைவிட்டு வீழ்ந்திடும்; அல்லது உடனே பிறரால் வீழ்த்தப்படும். ஆகவே, பக்குவநிலைவருமளவும் நாமெல்லாம் உலகநெறியை ஒட்டியே நிற்றல்வேண்டும். இப்படி நின்று முன் ஆசிரியர் பரிமேலழகியார் சொல்லிய முறைப்படி பக்குவப்படுவேமாயின் நம்மைப்பற்றியிருந்த அனைத்தும் தாமே நம்மை விட்டுப்போம்; போகாவிடினும் நம்மை இவற்றிற் பிரித்திடுதற்கு ஒரு நல்லாசிரியர் வந்து தோன்றுதல் ஒருதலையாம். ஆகவே, இப்படித்தமக்குத் துறவு நிலை வந்தமையை ஒரு சிலர் காஷாயம் முதலிய தரித்துப்பிறருக்குக் காட்டினும் காட்டுவர். ஒரு சிலர் அது தானுமில்லாமல் வாளாவிருப்பினும் இருப்பர்.

இனி, இல்லறந்தான் அத்தகைய துறவு நிலை எய்துதற்கு முயற்சிக்கும் ஒரு சிறந்த பாடசாலையாயிருக்கிறதன்றி வேறில்லை என்பது தோன்ற.

"இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை."

என்றெழுந்த திருக்குறளின் பெருமை என்னென்று சொல்லுவேன்? இத்திருக்குறளுக்குப் பரிமேலழகர்தாம், முயலுதலாவது 'புலன்களைவிட முயலுதலெனவும், முற்றத்துறந்த நான்காம் நிலையில் நின்ற சந்நியாசிகடாம் புலன்களை விட்டமையின் முயல்வாருள் அடங்காரெனவும், ஆகவே, முயல்வார் என்றது முற்றத்துறந்த பெரியாரை ஒழித்தொழிந்த ஏனையோரென்றும், அவ்வேனையோரெல்லாம் இல்வாழ்வானே சிறந்தான் எனவும் எழுதிய உரை அருமையினும் அருமை. இதனால் இல்லறமாவது புலன்களைவிட முயலும் இடம் என்பதும், அம்முயற்சியின் பயனாப் புலன்களை விட்டு நின்ற நிலை துறவறமென்பதும் பெற்றாம்.

நண்பர்காள்! அதனால் இல்லறம் முதலிய பிற அறங்களெல்லாம் அத்துறவறமாம் பேரின்ப நிலையெய்துதற்கு முயற்சிக்குமிடமென்பதனை மறவாது நமக்கு உரிய ஒழுக்கத்தின்கண்ணே நிற்போமாயின், அவ்வொழுக்கம் தானே நமக்குப் பெரியதோர் அடிப்படையாய் முடியும் என்று நம்மை அறிவுறுத்த வேண்டியன்றே நாயனாரும் 'நீத்தார் பெருமை' என்றது,

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு."

என்று திருவாய்மலர்ந்தருளினார்.

இனி, இப்பெரியாரது பெருமையை இவ்வளவு என்று எண்ணாற் கூறி அறிவுறுத்தப்புகின் அது அளவுபடாமைபற்றியே மறித்தும் இரண்டாவது குறளில்,

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று."

என்றார். இன்னுமா அவர் பெருமையை விரிக்கவேண்டும்?

இனி இஃதெனின், பெரியாரையுமறிந்தேன்; அவர் பெருமையுமுணர்ந்தேன்; ஆனால்,

‡ "குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது."

‡ திருக்குறள்.

என்கின்றார்களே; யான் அவரை எப்படிப்போய் அடைந்து உய்ய மாட்டுவேன்? என்னையும் என் இழிதகைமையையும் எண்ணிப்பின் அவரையும் அவர் பெருமிதத்தையும் எண்ணும்போது என் மனம் கூசுகின்றதேயெனின், இது ஒரு நல்ல வினா; மனமடங்கக்கற்ற பெரியாருக்குச் சினமுண்டாதல் கோபமுண்டாதல் யாங்ஙனம்? ஆயின் அவர் வெகுளியைக்கூறுவானேன் யெனின். 'குணமென்னுங் குன்றேறி நின்றார்' என்றவிடத்து எல்லாக்குணத்தலைமையாய குணம் சாந்தமன்றோ? அவர் அத்தகைய சாந்த முடையராயிருத்தல் நீ வெகுளிசெல்லாமை நோக்கியன்று. செல்லாமை நோக்கியதாயின்,

"செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கிலென் காவாக்காலென்."

என்றபடி அது சாந்தமன்றாம் ஆதலின் அப்பெரியாருக்கு வெகுளி சென்றால் பலியாத இடம் ஒன்றுமில்லை. அவ்வெகுளி தான் கணப்பொழுது நிற்பினும் போதும். இந்திரனாலும் காத்தலரிது என அவர் ஆற்றல் கூறி, அவ்வளவு ஆற்றலுடையராயிருந்தும் சாந்தம் முதலிய குணக்குன்றின் முடியின் கண் நின்றார் என அவர் பெருமை கூறியதேயன்றி வேறு கருத்தின்றாம் என்று என் சிற்றறிவிற்கு எட்டுகின்றது. இனி, ஒருகால் அவர்க்கு வெகுளி வரினும் அது தான் நம்மை அவர் தீநெறி விலக்கி நன்னெறிப்படுத்தி ஆட்கொள்ளும் ஒருவகை அருள் வழியாய் முடியும் எனவும் தோற்றுகின்றது. அவ்வாறன்றி மனமடங்கக்கற்றார்க்குச் சினமடங்கக்கற்பது ஓர் அருமையோ? அவர்செயலெல்லாம் அருளின் பாற்படுவதன்றி செற்றத்தின் பாற்படாதென்பதற்கு வத்தர்கன்றோ மேல் நாயனாரும்,

"அந்தண ரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்."

என்று முடிபு வைத்தார். இதன் கருத்து, தமக்குரிய ஒழுக்கத்தின் கண்ணே நின்று, பின் தன் இயற்கையிலேயே துறவடைந்த பெரியார் எல்லாவுயிர்கள் மேலும் செவ்விய தண்ணளியை, இரக்கத்தை, கருணையைப் பூண்டொழுகலான் அந்தணரென்று பாராட்டப் படுவர் என்பதன்றோ? இதனையுணராமல் வேறுசிலர் பூணுநூல் மார்பராய் விளங்கும் பார்ப்பனமக்களையே அந்தணரென்று வேண்டுவார். அது எமக்கு உடன்பாடன்று. யாம் தன்னியல்பிற்றுறவெய்தியார் எவராயிருப்பினும் அவரையே அந்தணரென்று வேண்டுவேம். தில்லைநடராசப் பெருமானே

¶ திருக்குறள்.

டொன்றுபட்டு ஐக்கியமாகிய எமது நந்தன் சாம்பானை அந்தணரென்று சொல்லயாம் ஒரு சிறிதும் பின்வாங்கிடேம்.

இது நிற்க, நண்பர்காள்! நல்ல பெரியாரைக்காணப் பெறாத குறை நம்முடையதன்றி, மற்று அவர்களோ யாண்டும் நிறைந்திருக்கின்றார்கள். என்ன செய்வது? அவரைக்காணப் பெறினும் ஒரு சிலர் அவராற் பெற வேண்டுவதைப் பெறநினையாமல் வெறிதே எனக்கு ஒரு புத்திரபாக்கியத்தை அருளல் வேண்டுமென்றும், புத்திரர்களையுடையார் எம்மக்களுக்கு நல்லஉத்தியோகம் அமர்ந்திடக்கடைக்கணிக்கவேண்டுமென்றும், பெரிதும் புண்படுத்துகின்றனர். அவ்வாறன்றி, நண்பர்கள்! நமது தாயுமானாரைப் போல் உள்ளபடியே இவ்வுலகத்தினிச்சையை யுணர்ந்து தண்ணருளை நாடத்தலைப்பட்டாருக்கு அவர் எதிர்ப்பட்டருளாமற் போகார். அத்தாயுமானாரும்,

$ "ஐவகையெனும் பூதமாதியை வகுத்ததனுள் அசரசரபேதமான [துச்
யாவையும் வகுத்து நல்லறிவையும் வகுத்து மறையாதி நூலையும்வகுத்
சைவமுதலாவளவில் சமயம் வகுத்துமேற் சமயங்கடந்தமோன
சமரசம் வகுத்தநீ யுன்னை நானணுகவும் தண்ணருள் வகுக்கவிலையோ?"

என்றருளுவாராயினார்.

பாருங்கள்! அவர் ஒருமுறை ஈசுவரனை விளித்து; ஏ! பகவானே! நீ ஐவகையெனும் பூதமாதியை வகுத்தாய், அம்மட்டோடே நின்றிருந்தாயானால் ஒன்றும் வரப்போகிறதில்லை. ஏன்? அவை சடப்பொருள்களாக, அவற்றிற்கு இன்பதுன்பவேறு பாடில்லை. ஆனால், நீ அம்மட்டோடே நில்லாமல் இன்னும் மேலேபோகி, என்ன செய்தாய்? அதனுள் சரஅசர பேதமான யாவையும் வகுத்தாய். இங்கே அநர்த்தம் வந்ததெல்லாம், நீ உயிருடைய இயங்கியற்பொருளாகிய நாய், பூனை, முதலியசரத்தை வகுத்ததினாலே தான். ஏன்? அவைகள் பசிக்கு உணவு தேடுதற்குள்ளே எத்தனையோ கஷ்டங்களை யனுபவிக்கவேண்டியிருக்கிறது. ஐயோ! போகட்டும்; இம்மட்டோடேதான் நின்றாயா? ஏதோ அவைகள் உணவுகாரணமாகச் சிறிது கஷ்டப்படுகின்றனவென்பதன்றி, மற்று அவைகளுக்கு முன் ஆராய்ச்சி யில்லை; பின் ஆராய்ச்சியில்லை; அதுவரையிற் சௌகரியந் தானே என்று நினைத்தால் நீ இவற்றிற்கு மேலேயே ஒரு நல்லறிவை வகுத்துவைத்திட்டாயே. இந்த அறிவு சும்மாவிடுமா? இது எவ்வளவெவ்வளவு கற்பனைகளையெல்லாம் எழுப்பி முடிவில் தெய்வம் உண்டா? இல்லையா? என்றும் ஆராயமுன் வந்திட்டது. வரவே, நீ என் செய்திருக்கி

$ தாயுமானவர்

ளாய்? தெய்வம் உண்டென்பது தோன்ற முன்னமே மறையாதி நூலையும் வகுத்துவைத்தாய். ஐயா! இனி, தெய்வம் உண்டென்ற நம்பிக்கை வந்து விட்டதாகவைத்துக்கொள்வோம். அந்தத்தெய்வத்தைக்காணும்வரையில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாய் ஊகிக்கவேண்டுமன்றி வேறில்லை. ஆகவே, ஒவ்வொருவரும் ஒவ்வொரு கொள்கையையே, சமயத்தையே கைக்கொண்டு நிற்பர். இதற்கேற்ப நீயும் சைவமுதலாவளவில் சமயமும் வகுத்தாய். இனி, நண்பீர்! நீங்களெல்லாம் ஸ்ரீல-ஸ்ரீ சிவகங்கை சுவாமிகள் நமது பட்டுக்கோட்டைக்கு வரப்போகிறார்களென்ற செய்தி கேட்டவுடனே சுவாமிகளை உங்கள்உங்கள் மனோபாவபடத்தில் ஒவ்வொரு விதமாய்ச்சித்திரித்து வைத்திருந்தீர்கள். ஆனால், சுவாமிகளை நேரிற் காணப்பெற்ற தினையானே முன்னேகொண்ட தனித்தனி வேறுவேறான பாவனைகளெல்லாம் விட்டு சுவாமிகள் உள்ளபடி எல்லாரும் ஒரேபடியாய்ப் பாவிக்கத் தலைப்பட்டீர்களன்றோ. அதுவேபோல, உண்மைச் சொரூபத்தைக் காணும் வரையும் ஒவ்வொருவரும் அதனை ஒவ்வொருவிதமாய் ஊகித்துக்கொண்டு பேசுவார்களாம். சமயம், சமயம் என்பது கொள்கை என்று பொருள்படும். ஆகவே, அந்தச் சொரூப நிலையியலைப்-பலபல சமயங்களும் பலபல்விதமாய்ப் பேசுமாம். ஆனால், உள்ளபடியே சொரூபத்தைக் கண்டபொழுது அங்கே சொரூபம் எப்படியிருக்கும்? இப்படியிருக்குமோ? என்று ஐயுற்று சந்தேகித்து, அநேகமாய் இப்படித்தான் இருக்கவேண்டும், என்று ஊகித்துக்கொள்ளவேண்டிய கொள்கையு மில்லையாம். சமயமுமில்லையாம். இதன்றியும், தனித்தனி அறிவால் ஊகிக்கப்புகுந்தகாலத்திலன்றோ வேறுபாடு காணப்பட்டு அனர்த்தம் விளைந்து கொண்டிருந்தது. இங்கே எவர்க்கும் உள்ளபடியே தோன்று மாகையால், சமரசமுண்டாகுமன்றி வேறுபாடு தோன்றாதாம். இதனாலேதான் தாயுமானார், சமயம் வகுத்த நீ அம்மட்டோடே நில்லாமல், மேற்சமயங்கடந்த மோனசமரசம் வகுத்தாய் என்றார். இப்படியெல்லாம் சொன்ன இவர் மறித்தும் என்ன சொல்லுகிறார்? 'ஆ! எனது இறைவனே! இவ்வளவுகாரியம் செய்த நீ, உன்னை நானணுகவும் தண்ணருள் வகுக்கவில்லையோ?' என்று சோர்ந்து வீழ்ந்தார். இப்படிப்பட்ட நிலைவந்தவர்க்கன்றோ பெரியார் கிட்டுவார், எனையோர்க்கு அவர்கிட்டப்போதல் யாங்ஙனம்? இங்ஙனங் கிட்டிய பெரியாரால் பெறும்பேற்றை என்னென்பேன்? அது தாங்காமற் றூங்கும் பேரின்பக் கட்டையாம். இதுநிற்க, வெறும் அறியாமையாய் நாம் நாளும் அநுபவிக்கும் ஒரு அற்ப தூக்கத்திற்கு என்ன மகிமை! பாருங்கள்! நாம் தூங்கி விழித்தவுடன் புத்தம் புது ஆற்றலும் சக்தியும் உண்டாகப் பெற்று நம் நம் காரியங்களை ஒழுங்காய்ச் செய்கின்றோம். நமக்குத் தூக்

கம் இல்லாமற் போனால் சோர்வும், சோம்பலும் மேலிட்டு ஒரு எந்தக் காரியமும் ஒழுங்காய் நடைபெறுவதில்லையாம். இதனாலேதான் மேனாட்டாரும் 'தூக்கத்தை வளர்க்கவேண்டி இயற்கையிலேயே முளைத்தெழுந்து விளங்குந் தாயே' என்று இராப்பொழுதைப் பாராட்டுகின்றனர். ஓர் ஆங்கிலவாசகன் ஒரு இரவு கவலை மிகுதியால் நித்திரையின்றி வருந்திய பொழுது அதனை விளித்து, தான் தூக்கமின்றி வருந்துவதும், தன்னூர் ஏழைஜனங்கள் தூக்கமுற்று மகிழ்வதும் தோன்ற, 'ஓ, நித்திரையென்னும் இயற்கைத்தாயே! உனக்கு எல்லாரும் சமந்தானே. இப்படியாக, நான் மெத்தை விரித்து, அதில் மெத்தென்ற பல தலையணைகளைப் பரப்பி வைத்து, கால்கைகளைப்பிடித்துவிட பல சேவகர்களை நியமித்து, தாலாட்டுதற்கென பல வீணை வல்லவித்துவான்களைப் பக்கத்திலேவைத்து, உன்னை வருந்தி வருந்தி யழைக்கவும், நீ என்னைமதியாமல், சிறுசிறு குடிசைகளிலே படுக்கப் பாயுமின்றித் தரையே பாயாகவும், தம் கையே அணையாகவும், பக்கங்களிலிருந்து ரீங்காரஞ்செய்யுங் கொசுக்களே தாலாட்டுவாராகவுங் கொண்டு கிடக்கும் எளியோர் கண்ணைக்கட்டவுமே நீ ஓடி அவருக்குதவுகின்றாயே, என்றுசொல்லினராம். ஆகவே, நண்பர்காள்! நித்திரையென்பது பணக்காரருக்குப்பயந்துவருவதில்லையாம். ஏதோ எளியராயினும் உழைப்பாளிகளுக்கேவந்து புத்தம் புது ஆற்றலையும் ஊக்கத்தையுந்தந்து உதவாநிற்குமாம். இதுவேபோல, நண்பர்காள்! பல சாத்திரங்களை ஓதி யுணர்ந்து பிறருக்குரைக்கின்றானே யென்று பயந்து சமாதி நிஷ்டை யென்பதுதானே வலுவில் ஓடிவந்திடாதாம். அது குருநாதனைக்காணப் படாது பட்டு உழைத்த பெரியாருக்கே கை வந்திடுமாம். அது கைவந்தபின் அவருக்கு எல்லாம் அதுவாகத் தோன்றுமாம். நமக்கு இப்பொழுது எல்லாம் தோன்றுகிறது. ஆனால் அதுதோன்றுகிறதோ? இல்லை. ஏன்? சமாதிகூடி நம்முள்ளே ஒருமுறை அந்த அவனைப் பார்த்து விடுவோமானால், பின், ஆகா! நம்முள்ளே கண்டபேர்வழி தானே எங்கும் நிறைந்து கிடக்கிறான் என்பது தோன்றும். இப்படி அவனை உள்ளேகண்டு வெளியேவந்த அவசரத்திலேதான் தாயுமானார், 'அகண்டாகார சிவபோக மெனும் பேரின்பவெள்ளம் பொங்கித்ததும்பிப்பூரணமாய், ஏகவுருவாய்க்கிடக்குதையோ!' என்றருளினார். கடவுள் சனகாதி நால்வருக்கும் இந்த வுண்மையை யறிவித்தபின், அவர்கள் உள்ளே அவனைக் கண்டு பின் வெளியேவந்தபின், அடே! அது எல்லாமாயிருக்கிறதே யென்றார்கள். உடனே ஆகோ! எல்லாமாயிருக்கிறதென்றால் இந்த உலக வடிவமாயல்லவா கொண்டுவிடுவார்கள் என்று, இல்லை எல்லாமாயல்லவு மாயிருக்கிற தென்றார். இப்படிச் சொல்வதன்றி, நம் அனுபவத்திற்கப்பாற் பட்ட வொன்றை நாம் கட்டிவைத்துச் சொன்னால்

உணர்த்த விரும்பினால் வேறு வழியில்லை. இதனாலேதான், அச்சமாதியும் தூங்காமல் தூங்குவதொரு நிலையென்று சொல்லப்படுகிறது. ஏன்? அவர்களை, 'ஐயா! நீங்கள் சமாதியில் இருந்தீர்களே அப்பொழுது எப்படியிருந்தீர்கள்? என்றால், நான் எல்லாவற்றையும் மறந்து ஒன்றுந் தெரியாமல் இருந்தேன்!' என்கின்றார்கள். ஆனால், தூங்கிப்போய்விட்டீர்களோவென்றால், 'அந்தோ! தூங்கவாவது; தூங்கவில்லை' என்கின்றார்கள். ஆகவே, எல்லாம் மறந்துபோய் ஒன்றுந் தெரியாத நிலையாயும், ஆனால் நமது தூக்கத்துக்குவேறான ஓர் அறிநிலையாயும் உள்ள ஒரு நிலையை நாம் அடைந்தால் அது தான் சமாதி நிலையென்று சொல்லப்படும் போலும். இதை நமது சொல்லாற்சொல்லி விவரிக்கப்புகுந்தால் எப்படிச் சொல்லமுடியும்? நீங்கள் தான் யோசித்துப்பாருங்கள். தூங்காமல் தூங்குவது ஒரு நிலையென்று சொல்லவேண்டுமின்றி வேறுவழியில்லை. இது பற்றியே பெரியாரும்,

* "தூங்காமற் றூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்"? என்றருளினர்.

இனி, அச்சமாதி நிலையை உவமைமுகத்தால் விளக்கும் ஒரு பாடலை மட்டுஞ் சொல்லி நிற்கின்றேன்.

† "அணைக்கிடா ஆசை யான கோடையாற் காய்ந்த நெஞ்சாம்
உடைப்படாக் குளத்தில் ஐந்து மடைவழி புலனின் செட்ட
மணைத்தொடும் பாய்ந்து பாய்ந்து சிற்றின்பம் வற்றிப் போக
மடையின்றித் தண்ணென் றூறும் வற்றாத ஊற்றே யென்கோ"

ஆ! ஆ!! அச்சமாதி நிலையை நாட்டவந்த இவ்வுவமையின் அழகை என்னென்பேன்? என்னென்பேன்? நம்முடைய மனமானது ஒரு குளமாக விருக்கிறதாம். இக்குளம் கோடை வெயிலாலே காய்ந்து பொருக்கு வெடித்துக்கிடக்கிறதாம். இப்படியிருக்கிற குளத்து வெப்பம் தணிய மழைபெய்தால் தண்ணீர்வர மடைவாயில் இல்லையோவென்றால்; ஏன் இல்லை? ஒன்றா? இரண்டா? ஐயா! ஐந்து மடைவாயில்கள் உண்டாம். இருந்து என்னசெய்கிறது? அந்தப் பூமி மிக உஷ்ணமான பூமியாகையால், இன்று மழை பெய்து தண்ணீர்வந்து குளம் நிரம்பினாலும் அந்தநீர் சற்று தான் இருக்கும். பிறகு வெறும்பாழாகி முன்னைப்போலவே பொருக்கு வெடித்திருந்த நிலைக்கு வந்துவிடுமாம். என்ன செய்கிறது? நித்தமா இடைவிடாது மழை பெய்து தண்ணீர்வந்து கொண்டேயிருக்கும்? போகிறது; ஏதோ மழை பெய்தகாலத்தில் தண்ணீர்வந்து குளிர் பெறுத்தியவரையில் ஆதாயந்தானே யென்றாலும், அப்

* பத்திரகிரியார் புலம்பல்   † திருவருட்கைவல்யம்

படியும் இல்லையாம். மழை வெள்ளம் மடைவாயில்களால் வரும்போது சும்மா வருகிறதில்லையாம். பின்னை யெப்படி வருகிறதென்றால், தான் வரும்போது கூடவே, சப்பாத்தி, கள்ளி, எருமைச்சாணி, பிறசாண முதலியவற்றைக் கொண்டுவருகிறதாம். ஆகவே, தண்ணீர் அப்பொழுதே வற்றிப்போனவுடன் மீந்ததோ இந்த கெட்டமணங்களே யன்றி வேறில்லையாம். இனி, இந்தக் குளத்திற்கு எப்படித் தான் வழி? இப்படியே பொருக்கு வெடித்தேகிடந்து காயவேண்டியதுதானோ? என்றால், ஏதோ ஓரோவழி அந்தக்குளத்தினுள் ஓரிடத்தில் ஓர் ஊற்றுக்கண் வெடிக்குமானால் மாறாமல் தண்ணீர் வந்துகொண்டேயிருக்கும். இது மிகச் சுத்தமான நீராகவுமிருக்கும். ஐயா! அந்த உஷ்ணமண் வேண்டியமட்டும் தண்ணீரைச்சாப்பிடவே எவ்வளவு தான் இழுக்கும்? உடனே குளம் நிரம்பிக்குளிர்ந்துபோம். அம்மட்டா? நிரம்பி வழிந்து பக்கங்களிலும் தண்ணீர்பாய்ந்து பயிர்பச்சைகளையும் வளப்படுத்துமாம். ஆகவே, இந்தக் காய்ந்துகிடந்த மனக்குளம் குளிரத் தோற்றிய ஊற்றுக்கண்ணே அந்தச் சமாதி நிலையென்பதுதோன்ற,

‡"கணக்கிடா ஆசை யான கோடையாற் காய்ந்த நெஞ்சாம்
உணப்படாக் குளத்தில் ஐந்து மடைவழி யுலகின் கெட்ட
மணத்தொடும் பாய்ந்து பாய்ந்து சிற்றின்பம் வற்றிப் போக
மணமின்றித் தண்ணொன் றூறும் வற்றாத ஊற்றே யென்கோ"

என்றருளினார்.

‡"இப்படி யிசைப்ப தல்லா லெப்படி யியம்ப லாகும்
அப்படி யிசைத்திட் டாலு மறிந்தவ ரறிவ தல்லால்
எப்படிக் காணா தாரிங் கியம்பிய மொழியாற் காண்பர்
செப்பிய மவுன வித்தை தெரிப்பன மொழியு முண்டோ"

நண்பர்காள்! இதுவே மவுன வித்தையாயிராநின்றது. இதனையறியாமல் அதனைச் சொல் சொல் என்றால் எப்படிச் சொல்லுவோம்? பாருங்கள்! சொல் முன்னே உண்டாயிற்றா? பொருள் முன்னே உண்டாயிற்றா? பொருளைக் கண்டபிறகுதானே இந்தப்பொருளை இந்தச்சொல்லால் வழங்கவேண்டுமென ஓர் பாகுபாடு செய்துகொண்டோம். இந்த விளக்கையறியாத ஒருவனிடத்தில் விளக்கு, விளக்கு என்று நாம் எவ்வளவு தான் சொன்னபோதிலும் அவனுக்கு விளக்கு விளங்கவிளங்காது. இதைப் பார்த்தபின், இதுகுறித்து நாம் எவ்வளவு பேசினாலும் அவன் தெரிந்துகொள்ள ஆற்றலுடையவனாகின்றான். யானையைக் காணாத ஒருவன் யானை

‡ திருவருட்கைவல்யம்

யைப்பற்றி எவ்வளவு வியாசங்களைப் படித்தாலும் அவன் செவ்வையாய் உணர்ந்துகொள்கின்றானில்லை. ஆனால் ஒரு முறை யானையை நேரிற் பார்த்துவிட்டால், பின் அதுகுறித்தெழுந்த வியாசங்களையெல்லாம் செவ்வையாயுணர்ந்து அவ்வியாசக்காரர் புத்திநுட்பங்களையும் ஆங்காங்கு கண்டுமகிழ்கின்றான். இம்மட்டோ? தானும் கூட ஒரு புத்தம்புது வியாசத்தை வேண்டுமானாலும் எழுதிவைத்திடுவான். இதுவேபோல சொரூபத்தைக் சாக்ஷாத்தவரையில் எவ்வளவு சாத்திரங்களைப் படித்தாலும் யாம் அவற்றின் உண்மைப்பொருளை யுணருகின்றோமில்லையாம். இவ்வளவு சாத்திரங்களும் உபநிடதங்களும் அந்த ஒரே உண்மைப்பொருளைப்பற்றி யெழுந்த வியாசங்களைப் போலேதான். இன்னும் அவைகளெல்லாம் அனுபவவுண்மைகண்ட நம்முன்னோர் நமக்கெனத் தொகுத்து வைத்த (Catalogue) புத்தக அட்டவணைபோலவிருக்கின்றனவென்றும் கொள்ளலாம். என்? ஐயா! ஒரு அட்டவணையில் எவ்வளவோ நகைகள் அச்சிடப்பட்டிருக்கக்காண்கின்றோம். அந்த நகைகளின் விலை, விபரம், பெறவேண்டிய இடம், முதலியதெரிவதோடேகூட, ஒருவாறு அதன்சொரூபத்தையும் தெரிகின்றோம். இனி, இது தானே நகையென்று அதைப்பிய்த்துக் காது மூக்குக்களில் ஒட்டிக்கொள்ளுகிறார்களோ?" இல்லையே. இதுபோலவே, ஏதோ சாத்திரங்களைப் படித்ததனால் சொரூப நிச்சயம் வந்துவிட்டது போல் தோன்றும். தோன்றினும் அது சொரூப நிச்சயமாகாது. என்? எவ்வளவு சாத்திரங்களைப் படித்துப்பேசினாலும், இப்படிப் பேசுகிற பேச்சினாலே அதனைக் கண்டுகொள்ள முடியாது. கற்பனைச்சொற்கள் அப்பரம்பொருளைக் காட்டாதென்று முன்னமே சொல்லப்பட்டது.

இத்தகைய அருமையையுடையதாயும், மனிதப்பிறவிக்குப் பயனாயும், பெரியோர்களால் அனுபவிக்கப்பட்டு வந்ததுமான 'சமாதி' யென்னும் பேரின்பநிலையை, அப்பெரியோர் அருளாற் பெறவேண்டியதேயன்றி வேறுவழியில்லையாதலால், அருட்கடலாகிய அப்பெரியாரைத் துணைக்கொண்டு, அப்பேரின்ப நிலையெய்தி நாமெல்லாம் உய்வோமாக.

சுபமஸ்து.

உ

திருச்சிற்றம்பலம்.

பட்டுக்கோட்டை,

ஸ்ரீமான்: வீ. வேங்கடராமபிள்ளையவர்கள்

தஞ்சை, கரந்தை, "கீழைத்தேய சகோதர சமாசத்தின்"

மூலமாய்த் திரிசிரபுரம்,

"தென்னூர்த்தமிழபிவர்த்தினி சங்கத்" தாருக்கு எழுதியனுப்பிய

வாழ்த்துச் செய்யுட்கள்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

1. ஓங்குபுகழ் மாநிலத்தி லுள்ளோர்க் கெய்தும்
உறுநட்பின் றிறங்கூறின் ஒருதே யத்திற்
பாங்குபெறப் பிறந்ததனாற் பழக்கந் தன்னாற்
பயிலொருதாய் வயிற்றிடையே பிறந்த பண்பால்
ஈங்கிவையு மல்லாமற் பல்லாற் றானும்
எய்திடுமா விவைநிற்க வெல்லாப் பண்பும்
தாங்குமொரு மொழிபேசு மதனா லெய்துந்
தவிராத நட்பினைப்போற் றருநட் புண்டோ?

2. ஒருமொழியாய்த் தனைவளர்த்த தமிழைப் போற்றா
துறுகின்ற பிறமொழியே பயில்கின் றானின்
அருமைபெறு தாய்பசிக்கப் பிறர்க்கே யன்ன
மளிக்கின்ற வள்ளலறந் தெரிந்தோ னாவான்
பெருமைபெறு தன்னாடு பாழாய் நிற்கப்
பிறர்நாட்டுக் குறுதிசூழ் பேதை நல்லன்
உரிமைபெறு தன்பெரியோ ரடியிற் றாழா
துதைத்தேகி யூர்க்கடிமை யாவான் நல்லன்.

3. இத்தகைய பலரறியா நிகழ்த லாலே
யெழில்குன்றி வளமறியாத் தமிழைப் போற்ற
நற்றகைய சங்கங்கள் பலவு மாங்கே
நடத்துகின்றா ரென்னுமொழி யென்பால் வந்து
தைத்திடலும் அமிழ்தினையே யொலியாய்ப் பண்ணித்
தளர்வறியா வென்செவியிற் சாய்த்தாற் போல
வைத்ததொரு மகிழ்ச்சிபெற்றேன் சங்கந் தன்னை
வழியழகாய் வளர்ப்பவரை வாழ்த்தப் போந்தேன்.

4. மன்னுதிரி சிரபுரத்தைச் சார்ந்த தென்னூர்
வண்டமிழை வளர்ப்பதற்கு வழக்கு முண்டால்
தென்மொழியன் றோதமிழத் தமிழை முன்னாட்
செழிப்பித்தோர் தென்னாட்டுத் தென்ன ரன்றோ ?
அந் நிலைமை குன்றுமற் றமிழைக் காப்பா
னருமைபெறு தமிழ்ச்சங்கந் தென்னூர்க் கூட்டும்
நன்னிலைமை யோர்வாழி ! நவின்ற சங்கம்
நடத்திவரு தலைவருமெந் நாளும் வாழி.!

முற்றுப்பெற்றன.

இப்புத்தகம் வேண்டியவர்கள், தஞ்சாவூர் கருந்தட்டான்குடி சேர்வைகாரன் தெருவில் மகா-ள-ள-ஸ்ரீ வே. கோபாலசாமி பிள்ளையவர்கள் இடம் பெற்றுக்கொள்ளலாம்.

7097